STAFF COPY
NOT FOR SALE

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

தரமான சேட்டிங்
★ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை
ரூ 2.50

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

சுடர் 4 விபவ ஸூ பங்குனி மீ௳ 13 ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஷஃபா பிறை 17 (26 - 03 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-94

## ஜெயலலிதா ஆஸ்பத்திரியில்

சென்னை, மார்ச் 26

தாக்குதலுக்கு இலக்கானதாகக் கூறப்படும் அ. தி. மு. க. தலைவி செல்வி ஜெயலலிதாவும், அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகமும் ஆகியோர் நேற்று சிகிச்சைக்காக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

தமது தலைவி ஜெயலலிதாவைப் பாதுகாக்கும் முயற்சியில் காயமடைந்ததாகக் கூறப்படும் திரு.கே.கே.எஸ். ஆர். இராமச்சந்திரன், திரு. எஸ். திருநாவுக்கரசு ஆகியோரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். [உ]

## முச்சந்தி முரளி



தமிழ்நாடு சட்டசபை இப்ப சண்டை சபையாய் மாறியிட்டுது கண்டியளோ...!

## நெல்லியடியில் கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம், மார்ச் 26

நெல்லியடிப் பகுதியில் நேற்று பிற்பகல் 2. 30 மணியளவில் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

அந்த அசம்பாவிதத்தினால் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்து ஊர்ஜிதப்படுத்தக்கூடிய தகவல் ஏதும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. (உ-9)

## பாராட்டு வைபவம்

கானமூர்த்தி – பஞ்சமூர்த்தி நாதஸ்வரக் கலைஞர்களின் வெள்ளி விழா பாராட்டு வைபவம் இன்று நடைபெறுகிறது.

சிறப்பிதழ் 5 ஆம் பக்கத்தில் செய்தி விவரம் 7 ஆம் பக்கத்தில்.

## மட்டுநகருக்கு 4 புதிய பஸ்கள்

மட்டக்களப்பு, மார்ச் 26

மட்டக்களப்பு கி. போ. சபைக்கு மேலும் 4 புதிய பஸ் வண்டிகளை மத்திய போக்குவரத்துச்சபை வழங்கியுள்ளது.

ஏற்கனவே இரு சிறிய பஸ்கள் மட்டக்களப்புச் சாலைக்கு வழங்கப்பட்டமை தெரிந்ததே. (உ-21)

### சுபநேரம்

26-03-1989
பங்குனி 13
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
09-15 முதல் 10-45 வரை
ராகுகாலம்:
04-45 முதல் 06-15 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
உயிர்த்த ஞாயிறு

★ அமளி துமளி ★ கோப்புகள், "மைக்குகள்" பறந்தன

# தமிழக சட்டப் பேரவை நேற்று போர்க்களமானது!

### ★ கலைஞர் கண்ணாடி தூள்; மூப்பனாருக்கு செருப்பு வீச்சு!
### ★ இரத்தம் சொட்டும் நிலையில் அமைச்சர் வீரபாண்டி
### ★ தலைவிரி கோலமாக ஜெயலலிதா வெளியேறினார்
### ★ அவரது அணி கூண்டோடு "சஸ்பெண்ட்"

சென்னை, மார்ச் 26

தமிழ் நாடு சட்டசபையில் நேற்றுப் பெரும் அமளிதுமளி ஏற்பட்டு அது போர்க்களமானது! கோப்புகள், மேசையில் பொருத்தப்பட்டிருந்த ஒலி வாங்கிகள் (மைக்குகள்) போன்றவை ஏவுகணைகளாகப் பறந்தன.!!

உள்ளாட்சி அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அமளி துமளியில் சிக்கித் தலையில் படுகாயம் அடைந்தார். அவர் இரத்தம் சொட்டச் சொட்டக்காணப்பட்டார்.

முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் மூக்குக் கண்ணாடி உடைந்தது.

காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார் மீது செருப்புகள் வீசப்பட்டன.

அ. தி. மு. க. அணியின் தலைவி செல்வி ஜெயலலிதாவைத் தாக்குவதற்கு முயற்சிக்கப்பட்டது. அவர் தலைவிரிகோலமாகச் சபையிலிருந்து வெளியேறினார்.

அவரது அணியைச் சேர்ந்த 28 எம் எல் ஏக்களும் சபையிலிருந்து "சஸ்பெண்ட்" (இடைநிறுத்தம்) செய்யப்பட்டனர்.

கடந்த ஆண்டு ஜனவரியில் தமிழக சட்ட சபையில் ஏற்பட்ட பெரும் கைகலப்பு, அடி தடி சண்டைகளை அடுத்துத் தமிழக சட்ட சபை கலைக்கப்பட்டது தெரிந்ததே. அதற்குப் பிறத தேர்தல் நடைபெற்று, புதிய சட்ட சபை தெரிவான பின்னர் மீண்டும் அங்கு நேற்றும் போர்க்கள நிலை ஏற்பட்டது.

சட்டசபையின் வரவு செலவுத் திட்டக் கூட்டம் நேற்று ஆரம்பமானது.

முதலமைச்சர் வரவு செலவுத்திட்டத்தை வாசிக்கத் தொடங்குவதற்கு முன்னர் இந்திரா காங்கிரஸ் துணைத் தலைவர் குமரி அனந்தனும் எதிர்க்கட்சித்தலைவி செல்வி ஜெயலலிதாவும் ஒழுங்குப் பிரச்சினை கிளப்பினர்.

சபை உறுப்பினர்களைப் பொலிஸார் துன்புறுத்துவதாக குமரி அனந்தன் சொன்னார்.

செல்வி ஜெயலலிதா பேசும் போது, 'பொலிஸார் பொய் வழக்கு ஒன்றை என்மீது தாக்கல் செய்துள்ளனர். அதுபற்றி இன்றே விவாதிக்கவேண்டும்''

—என்று சொன்னார்.

'வரவுசெலவுத்திட்ட அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக ஆளுநரால் நிச்சயிக்கப்பட்ட கூட்டம் இது. ஆகவே ஒழுங்குப் பிரச்சினைகள்பற்றிய விவாதங்களை வருகிற திங்கட்கிழமை வைத்துக்கொள்ளலாம்' என்று சபாநாயகர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பளையில் நேற்று ஊரடங்கு

தாளையடி, மார்ச் 26

பளைப்பகுதியில் நேற்று உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டிருந்தது.

பளை பஸ் நிலையம், சந்தைப்பகுதி, கடைகள் அனைத்தும் நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டன.

வெள்ளிக்கிழமை இப்பகுதியில் நடைபெற்ற அசம்பாவிதத்தினை அடுத்தே நேற்று ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

இதன் காரணமாக இவ் வழியேயான வாகனப் போக்குவரத்துக்கள் பஸ் நிலையப் பகுதியைத் தவிர்த்து ஒழுங்கைகள் ஊடாக இடம் பெற்றன. (உ-117-144-10)

## கொழும்பு - யாழ் மினிபஸ் புனவையில் கொள்ளை !

யாழ்ப்பாணம், மார்ச் 26

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மினிபஸ் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை மதவாச்சி புனவை என்ற இடத்திற்கு அண்மையில் வழிமறிக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டது.

இயந்திரக்கோளாறு காரணமாக பஸ் குறைந்த வேகத்தில் வந்துகொண்டிருந்ததாகவும்.- அவ்வேளை வீதிக்கு குறுக்கே மரக்கட்டைகள் போட்டு பஸ்ஸை மறித்த கொள்ளையர் கத்திகளையும், ஆயுதங்களையும் காட்டி பயணிகளிடம் இருந்த அனைத்து நகைகளையும் கொள்ளையடித்தனர்.

திடீரென இப்பாதையூடாக வேறு வாகனங்கள் வருவதைக் கண்ட கொள்ளையர் தமது நடவடிக்கைகளை இடையில் நிறுத்தி விட்டு ஓடித்தப்பினர்.

இந்தப்பகுதியில் தொடர்ந்து கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ-10-118)

## தீவிரவாதக் குழு ஒன்று சரணடைந்ததாக அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 26

வடமத்திய மாகாணத்தில் தீவிரவாதக் குழு ஒன்று இலங்கை இராணுவ முகாமில் நேற்றுச் சரணடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜரத்ன இதை அனுராதபுரத்தில் நேற்றுத் தெரிவித்தார். (உ-எ)

## ஆனைக்கோட்டையில் நேற்று துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்

ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று நண்பகல் 1-30 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றன.

இரண்டு கோஷ்டிகளுக்கு இடையில் இடம்பெற்ற இந்த மோதலில் சிலர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ஊர்ஜிதமான மேலதிக விவரங்கள் தெரிய வரவில்லை. (உ-9)

## ரயில் பயணி ஒருவரின் காலில் சூட்டுக் காயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 26

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்நோக்கி வந்த "யாழ் தேவி" ரயிலில் இருந்தபயணி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

ரயில் பெட்டியிலும் துப்பாக்கிச்சன்னம் துளைத்ததுவாரம்காணப்பட்டதாக ரயில்வே திணைக்கள வட்டாரங்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மீன் பிடித் தடை நீக்கம்

தாளையடி, மார்ச் 26

வடமராட்சி கிழக்குக் கடற்பிரதேசத்தில் இரவுநேரத்தில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடை உத்தரவு நீக்கப்பட்டுள்ளது.

மாலை 6 மணி தொடக்கம் காலை 6 மணி வரை இரவு நேரத்தில் மீன் பிடிப்பதற்கு கடந்த சில தினங்கள் அங்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. (உ-144)

## கோக்குவிலில் கொள்ளையரைக் கல்லெறிந்து கலைப்பு

கொக்குவில் பகுதியில் கொள்ளையிட முற்பட்டவர்களை அவ்வூர் மக்கள் கல்லெறிந்து கலைத்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு11மணி அளவில் கொக்குவில் மேற்கு சொர்ணவடலிப் பகுதியில் இடம்பெற்றது.

அங்கு நகைத் தொழிலாளி ஒருவரின் வீட்டின் பின்பகுதியில் கொள்ளையர் நடமாட்டம் காணப்பட்டது. பீதியடைந்த வீட்டுக்காரர்கள் கூக்குரலிட்டனர். இதனையடுத்து அப்பகுதி மக்கள் ஒன்றுகூடிக் கல்லெறிந்து கொள்ளையரைக் கலைத்தனர்.

இப் பகுதியில் கடந்த சில நாட்களாகக் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வந்தது தெரிந்ததே.

## முல்லைத்தீவு சென்றிருந்த ஈ. ஜ. மு. குழு திரும்பியது

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடச் சென்ற ஈழவர் ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்று யாழ்ப்பாணம் திரும்பியது.

முல்லைத்தீவுப் பகுதியில் பாதிப்புற்ற நூற்றுக்கணக்கான குடும்பங்களை பிரஸ்தாப குழுவினர் சந்தித்து உரையாடினர்.

முல்லைத்தீவுச் சம்பவங்கள் குறித்து, இக் குழு அறிக்கை ஒன்றை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ-10)

## "ஒப்பரேஷன் பாஸ்" நெடுங்கேணிக்கும் விஸ்தரிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெடுங்கேணி, தண்ணீரூற்று பகுதிகளுக்கும் அமைதிப்படையினரின் இராணுவ நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே குமுழமுனை, நாயாறு, அளம்பில், செம்மலைப் பகுதிகளில் அமைதிப் படையினர் "ஒப்பரேஷன் பாஸ்" இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு வருவது தெரிந்ததே.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் தண்ணீரூற்று, நெடுங்கேணிப் பகுதிகளுக்கும் அந் நடவடிக்கை விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது.

மேற்படி பகுதிகளில் இருந்து பொதுமக்கள் எவரும் வெளி ஊர்களுக்கு செல்ல முடியாதவாறு படையினர் கட்டுப்பாடு விதித்துள்ளனர்.

வெளியூர்களில் இருந்தும் இப் பகுதிகளுக்கு எவரும் செல்ல முடியாத நிலை இருப்பதாக முல்லைத்தீவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-10)

## முல்லைத்தீவில் 30 ஆயிரம் துருப்புகள்?

கடந்த திங்கட்கிழமையில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிரான தாக்குதலை இந்திய அமைதிப் படையினர் தீவிரப் படுத்தியிருக்கின்றனர் என்றும் வெரித்தாஸ் செய்தி தெரிவித்தது.

30 ஆயிரத்துக்கும் அதிகமான இந்தியத் துருப்புக்கள் இதில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர். ஏராளமான டாங்கிகளும் துப்பாக்கிகள்பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்களும் இத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படுவதாகவும் அந்தச் செய்தி கூறியது.

இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் 6பேர் மட்டுமே கொல்லப்பட்டதாகவும் நூற்றுக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர்களும் உயிரிழந்தனர் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கூறியதாக அச் செய்தி மேலும் தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் கூறும் புதிய தாக்குதல்கள் குறித்து தமக்கு ஒன்றும் தெரியாது என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரபூர்வ பேச்சாளர் சொன்னார் என்று அதே செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## பாதிப்புற்ற பகுதிகளுக்கு செல்லமுடியாத நிலையில் அரசாங்க அதிகாரிகள்!

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு, பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிகள் எதையும் செய்ய முடியாதநிலை அப்பகுதி அரசாங்க அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

மோதல்கள் நடைபெறும் பகுதிகளுக்கு அதிகாரிகள் செல்வது அவர்களது பாதுகாப்புக்குக் குந்தகமாக முடியலாம் எனக் கருதி, அந்த இடங்களுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்படுகிறதாம்.

இதன் காரணமாக அரசாங்க அதிபர் முதற்கொண்டு, கிராமசேவையாளர்வரை பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று மக்களுக்கு உதியோக பூர்வமாக உதவிகள் எதையும் செய்ய முடியவில்லையாம்.

இதேவேளை கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக இடம் பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளன என்று அறியவருகிறது.

இப்பகுதிகளில் பல வீடுகள் தீக்கிரையாகிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்கள் பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். [அ-10]

## கம்பர் மலையில் சூட்டுச்சம்பவம்

வல்வெட்டித்துறை கம்பர் மலைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

நேற்று பிற்பகல் 3 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதனைத்தொடர்ந்துஇப்பகுதியில்தேடுதல்இடம்பெற்றது.

## எழுத்தாளர் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம், மார்ச் 26

நல்லூர் மருதடி வீதியில் வைத்து எழுத்தாளர் குமார் தனபால் (கே. தனபாலசிங்கம் – வயது 47) என்பவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் இவர் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கும்பொழுது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டு மரணவிசாரணை மேற்கொள்ளப்பட்டது. (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீடியோ, டெக் Panasonic, நல்ல நிலையில் உள்ளது. உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: உதயன் யூனிக், 58/8, K. K.S. Road, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். [10715]

National T. V. அலுமாரி, கட்டில், கசற் றேடியோ, மேசைகள், மணிக்கூட்டு டைக்கு ஏற்ற கபேட், கண்ணாடி மேசை மற்றும் பல உடன் விற்பனைக்கு உண்டு. நடராசா குருக்கள் வாசம், வீரமாகாளி அம்மன் கோயில் வளவு, நல்லூர். [10173]

நல்ல நிலையில் உள்ள Minor Car [பச்சை] விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: 40/25, வைமன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். [1018:

பாவிப்பிலிருந்த ஆறுபக்க சோக்கேஸ், பின்னல் கட்டில்கள், சிங்கர் கால், தையல் மெஷின், குளிர் சாதனப் பெட்டி, அச்செழுத்து ரைப் கேஸ், ரைப்ஸ்ராண்டு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வஸ்தியன் அச்சகம், சுண்டுக்குளி. (10184)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக்கோழிகள், பேட்டுக்கோழிகள், சேவற்கோழிகள், சூப்குஞ்சுகள், விருத்துக்குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம்செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/1771)

### புத்தெழில்

பல சுவையான அம்சங்களை உள்ளடக்கிய பங்குனி இதழான புத்தெழில் சகல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது. கோகிலா மகேந்திரனின் "முதுகில் ஊரும் தம்பலப் பூச்சி" தொடர் நாவல் புத்தெழிலில் வாசியுங்கள். [10177]

### வாடகைக்கு

பலசரக்கு வியாபார நிறுவனம் வாடகைக்கு விடப்பட உள்ளது. தொடர்புகொள்க: இல, 56, சுண்டுக்குளி பாண்டியன்தாழ்வு, சந்தன மாதா கோவில் முன்பாக. (10183)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும் தமிழ் ஆங்கில டைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/1876)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை, சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்பு சேவற்குஞ்சுகள், Golden Comet சிவப்புப்பேட்டுக்குஞ்சுகள், Hy-line கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/1770)

[Lohmann)& [Dekalb] பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், பிறவுண் சேவல் குஞ்சுகள் [பிலிமத்] கறுப்பு சேவல் குஞ்சுகள் [29-3-89] புதன்கிழமை விநியோகிக்கப்படும். சொண்டு வெட்டப்பட்டது. தடுப்பூசி போடப்பட்டது. முற்கூட்டியே பதிவு செய்க. இல 9, கந்தையா லேன், சுன்னாகம். [புகையிரத நிலையத்துக்கு அருகாமையில்](10125)

பிறிமா இன ஒரு நாள் புறொயிலர்க் குஞ்சுகள், லோமன் வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 29-03-89 இல் விநியோகிக்கப்படும். 26-3-89 முன் பதிவு செய்க. C. S. K பாம் சென்ரர், கச்சேரியடி, கிருஷ்ணா பாம் சென்ரர், திருநெல்வேலிச் சந்தி. திருமகள் ஸ்ரோர்ஸ், சிவலிங்கப் புளியடி, Red Rose Farm, வல்வெட்டித்துறை, (10135)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

நாற்பத்தைந்து நாட்களில் வளர்ச்சியடையும் (Lohmann) (Dekalb) சேவல்குஞ்சு விலை ரூ. 4.50. (29-3-89) புதன் கிழமை விநியோகிக்கப்படும். கூடுதலாக எடுப்பவர்களுக்கு விசேஷ சலுகை உண்டு. முன் கூட்டியே பதிவுசெய்க. இல. 9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) (10708)

### தேவை

வீட்டிற்கு பெண் உதவியாளர் தேவை. 50 வயதிற்கு மேற்பட்டவரும், பொறுப்பற்றவரும் திடகாத்திரமுள்ளவரும் விரும்பத்தக்கது. சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். சு. கனகசபாபதி, 212, கோவில் வீதி, நல்லூர். (10720)

ஜெமினி போட்டோ ஸ்தாபனத்துக்குப் பின்வரும் வேலையாட்கள் உடன் தேவை. 1. ஆங்கில ரைப்பிங், 2. லிகிதர் (கிளாக்) 3. காசாளர் (கஸ்சியர்) ஆகிய பதவிக்குத் தகுதியுள்ள பெண்கள்தேவை. எதிர்வரும் 26.3.89 ஞாயிறு மாலை 5 மணி வரை நேரில் வரவும். ஜெமினி போட்டோ, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (10716)

நல்ல இன சமனா ஜமனா பாரி 3 – 6 மாதங்களுக்கு உட்பட்ட இருநூற்றுக்கு மேற்பட்ட வெள்ளாட்டுக் குட்டிகள் திருகோணமலை வை. எம் சீ. ஏக்கு தேவைப்படுகின்றது. தொடர்பு முகவரி: எ.உ.வே துரைராசா, வை.எம். சீ. ஏ. மேற்பார்த்து, யாழ்ப்பாணம் (10164)

தையலில் நன்கு அனுபவம் வாய்ந்த பெண் பிள்ளைகள் தேவை. யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்போர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம். தொடர்பு 211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (10188)

### பணிப்பெண் தேவை

புருணையில் வாழும் யாழ் தமிழ்க்குடும்பம் ஒன்றுக்கு பணிப்பெண் தேவை. 35-50 வயதுக்குட்பட்டோர் விரும்பத்தக்கது. வைகாசியில் பிரயாணம். நேரில் தொடர்பு கொள்ளவும்: க. சுப்பிரமணியம், இன்டர் நெசனல், எலக்ரோனிக் சென்ரர், கே.கே.எஸ் ரோட், தெல்லிப்பளை. (10721]

### எவர்சில்வர் தயாரிப்புகள்

எங்கும் கிடைக்கின்றன. Rajz Brand எவர் சில்வர் தயாரிப்புக்கள் உங்கள் பணத்திற்கு சிறந்த பெறுமதி! தலைமுறைதலைமுறையாக நிலைத்து நின்று பயன் தருபவை. Rajz Brand Tea set, Dinner set (round) Dinner set, [Oval] Boiler, HotPlate, Lunchboxes Lunch carriers, Cooking pans, Thookuchaddes, Office Table, Tray with pen holders இன்னும் பற்பல. காட்சி அறை S. A தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (C/1909)

### NEW CITY TRADERS

சகல விதமான T V டெக், றேடியோ, அன்ரனா பூஸ்ரர் வயர் பைப்செற், T D K Maxell Audio Vidio கசற், வீட்டுக்குத் தேவையான மணிக்கூடு, சிறுவர் விளையாட்டுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளச் சிறந்த ஸ்தாபனம்: New City Traders 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C1839)

### விசேட கழிவு

சுக்கில வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் எம்மிடம் தொகையாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். கூடுதலாக வாங்குவோருக்கும், வியாபாரிகளுக்கும் விசேட கழிவு. விற்பனையாளர்: மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C/1574

## 2ஆவது ஆண்டு நினைவஞ்சலி



**சின்னையா நாகேசு**

(ஜெகஜோதி என்ஜினியரிங் வேக்ஸ் உரிமையாளர் யாழ்ப்பாணம்)

தோற்றம்: 19 - 07 - 1928 மறைவு: 06 - 04 - 1987

திதி: 26 - 03 - 1989

அன்புத் தெய்வமே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டீரே! மாய்ந்த உங்கள் நினைவால் மனம் நொந்து வாழ்கின்றோம். உங்கள் அருமை முகத்தை எம்மால் காண முடியாதென எண்ணும் போது எங்கள் இதயம் வெம்புகிறதே! உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்.
சகோதார, சகோதரிகள்,
ஊற்றார், உறவினர்.

நவாலி தெற்கு,
மானிப்பாய். [10191]

### ADVANCED ENGLISH

புதிய நாலாவது பிரிவு ஆரம்பம்; 29-03-89. நாட்கள் திங்கள்/ புதன். நேரம் மாலை 4. 30 — 6 மணி. S.B Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (10165)

## ஆங்கில சுருக்கெழுத்தாளர் போட்டிப் பரீட்சை கொழும்பில்

அரசாங்க ஆங்கில சுருக்கெழுத்தாளர் சேவை ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சை ஏப்ரல் மாதம் முதலாம் திகதி கொழும்பில் நடைபெற இருக்கிறது.

மேற்படி பரீட்சை இரண்டு பகுதிகளாக நடைபெறும்.

முதலாவது பகுதியில் சுருக்கெழுத்து, தட்டச்சு வேகக் கணிப்பீட்டுப் பரீட்சை பரீட்சார்த்திகளின் ஆங்கிலத் தேர்ச்சியை அளவிடுவதற்கான கட்டுரைப் பரீட்சை ஆகியன இடம்பெறும்.

இரண்டாவது பகுதியில் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

முதலாவது பகுதியில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாவாந்துறை சென். மேரிஸ்
விளையாட்டுக் கழகம் நடாத்தும்
அமரர் ச. செபஸ்தியாம்பிள்ளை (பரியாரி காணிக்கை)
அவர்களின் 26ஆம் வருட ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்துக்கான ஏழுபேர் கொண்ட நொக்கவுட் முறையிலான

## உதைபந்தாட்டப் போட்டி

**1ஆம் பரிசு சுற்றுக் கேடயம் வெற்றிக் கிண்ணம் ரூபா 2000/- ரொக்கப்பணம்**

**2ஆம் பரிசு வெற்றிக் கிண்ணம் ரூபா 500/- ரொக்கப் பரிசு**

**இறுதி ஆட்டத்தில் சிறந்த வீரருக்கு வெற்றிக் கிண்ணம், ரூபா. 100/-**

**சுற்றுப்போட்டியில் சிறந்த வீரருக்கு வெற்றிக் கிண்ணம், ரூபா. 100/-**

முதலிய பரிசுகள் வழங்கப்படும்.

யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்கள் சகலதும் பங்குபற்றலாம். நாவாந்துறை/சென். மேரிஸ் வி. க. மைதானத்தில் போட்டிகள் 05-04-1989ஆம் திகதி ஆரம்பமாகின்றன. பங்குபற்றும் கழகங்கள் விண்ணப்பங்களுடன் ரூபா 25/- விண்ணப்பக் கட்டணமாக செலுத்த வேண்டும் ஒரு கழகத்தில் இரண்டு கோஷ்டிகள் மாத்திரம் பங்குபற்ற முடியும். விளையாட்டுப் போட்டிகள் யாழ். உதைபந்தாட்ட சங்க விதிகளுக்கு அமைய நடைபெறும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி;—

செயலாளர்
சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம்
7/2, 2ஆம் குறுக்குத் தெரு;
நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.

[சென். மேரிஸ் சனசமூக நிலையத்தின் கல்வி நிதிக்கான அதிஸ்டலாபச் சீட்டு இழுப்பு 19-04-89 புதன் கிழமை நடைபெறும்.] [10190]

## புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத்திட்டம்

**பாதிக்கப்பட்ட கட்டிடங்கள்: உபகரணங்கள் திருத்துதல் புனரமைத்தலுக்கான கடன்கள் (தொழில் முயற்சிகள்)**

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு ரெபியா (ஆட்கள், சொத்துக்கள் கைத்தொழில் புனரமைப்பு அதிகாரசபை) மூலம் பாதிக்கப்பட்ட கட்டிடங்கள், உபகரணங்கள் திருத்துவதற்கும், புனரமைப்பதற்கும் பின்வரும் கடன் வசதிகளைச் செய்து கொடுக்கவுள்ளது.

ஆகக்கூடிய கடன் தொகை ரூபா 200, 000/- அங்கிகரிக்கப்படும் கடன் தொகை பாதிப்பின் அளவிலும் கடன்பெறுவோரின் திருப்பிக் கொடுக்கும் ஆற்றலிலும் தங்கியிருக்கும்.

**வட்டி வீதம்:** வருடத்துக்கு ஒன்பது (9%)

**திருப்பிக்கொடுக்கும் காலம்:** பத்து (10 வருடங்கள் வரை)

**பிணை:** குறிக்கப்பட்ட சொத்தையோ அல்லது கடன் வழங்கும் நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு பிணையையோ பொறுப்பாகக் கொடுத்தல் வேண்டும்.

**தகைமைகள்:** 1983 ஆம் ஆண்டு யூலைமாதம் 24ஆம் திகதி தொடக்கம் இற்றை வரை இடம்பெற்ற இனக் கலவரம், பயங்கரவாத நடவடிக்கைகள் இவை தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றுள் ஒன்றினால் கட்டிடங்கள், உபகரணங்கள், சேதமடைந்து பாதிக்கப்பட்டவர்கள் இக்கடனுக்கு தகுதியுள்ளவர்களாவார்கள். குடும்பமொன்றுக்கு இத் திட்டத்தின் கீழ் ஒரு கடன் மட்டுமே வழங்கப்படும்.

**கடன் வழங்கும் நிறுவனங்கள்:**
இலங்கை வங்கி,
மக்கள் வங்கி,
ஹட்டன் நெசனல்வங்கி

**திட்டம்செயல்படும் பிரதேசங்கள்:**
சேதமுற்ற கட்டிடங்கள், உபகரணங்கள் அமைந்துள்ள மாவட்டங்களிலெல்லாம் இத்திட்டம் அமுல் செய்யப்படும்.

**கடன் விண்ணப்பங்கள்:**
இக் கடன் வசதிக்கு தகைமை உடையவர்கள் கிராம சேவை உத்தியோகத்தரிடமும், உதவி அரசாங்க அதிபரிடமும் பதிவு செய்து பாதிப்பின் அளவை அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ் ஒன்றைப் பெற்று பாதிக்கப்பட்ட கட்டிடம் அமைந்திருக்கும் இடத்திற்கு அண்மையில் உள்ள வங்கி முகாமையாளரைச் சந்திக்கவும்.

சி. எச். எம். ரி சந்திரசேகர,
பதில் செயலாளர்,
புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு,
கொழும்பு.

இல.1, அல்பிரட் கவுஸ் கார்டின்ஸ்
கொழும்பு-03. (C/2004)

## யாழ் பல்கலைக்கழகம், இலங்கை

## 1987/88 கல்வியாண்டிற்கான மகாபொல இறுதிக் கொடுப்பனவுகள் 3 ஆவது, 4 ஆவது தவணைப்பணம்

பின்வரும் மாணவர்களுக்குரிய மேற்படி கொடுப்பனவுகள் கீழ்வரும் அட்டவணைப்படி நடைபெறும்.

| பகுதி | | திகதியும் நேரமும் |
|---|---|---|
| 1. மருத்துவ பீடம் | | |
| 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் வருட மாணவர்கள் | | 27.03.89 — மு. ப. 9.00 — 12.00<br>29.03.89 — பி. ப. 1.30 — 03.00<br>03.04.89 — மு. ப. 9.00 — 12.00 |
| 2. கலைப்பீடம் | | |
| அ. கலைப்பிரிவு, வியாபார நிர்வாகப்பிரிவு, வர்த்தகப் பிரிவு | 2ஆம் வருட மாணவர் | 27.03.89 — பி. ப. 1.30 — 03.00<br>30.03.89 — மு. ப. 9.00 — 12.00<br>03.04.89 — பி. ப. 1.30 — 03.00 |
| ஆ. கலைப்பிரிவு, வியாபார நிர்வாகப் பிரிவு, வர்த்தகப் பிரிவு | 3ஆம் வருட மாணவர் | 28.03.89 — மு. ப. 9.00 — 12.00<br>30.03.89 — பி. ப. 1.30 — 03.00<br>04.04.89 — மு. ப. 9.00 — 12.00 |
| இ. கலைப்பிரிவு, வியாபார நிர்வாகப் பிரிவு, வர்த்தகப் பிரிவு | 4ஆம் வருட மாணவர் | 28.03.89 — பி. ப. 1.30 — 03.00<br>31.03.89 — மு. ப. 9.00 — 12.00<br>04.04.89 — பி. ப. 1.30 — 03.00 |
| 3. விஞ்ஞான பீடம் | | |
| பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் | 2ஆம், 3ஆம் 4ஆம் வருட மாணவர்கள் | 29.03.89 — மு. ப. 9.00 — 12.00<br>31.03.89 — பி. ப 1.30 — 03.00<br>05.04.89 — மு. ப. 9.00 — 03.00 |

**கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்படவேண்டியவை:**

1 பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2 மாணவர் பதிவுப் புத்தகம் / புதுப்பிக்கப்பட்டது.
3. ரூ. 1/- பெறுமதியான முத்திரை.

**பதில் பதிவாளர்.**

[C-2011]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

**செல்வன் ஸ்ரீரங்கன் - கஜன்**

[26-3-1989]

ஏழாலை வடக்கு ஸ்ரீரங்கன் - ஜானகி தம்பதிகளின் புதல்வன் கஜன் இன்று தனது 2ஆவது பிறந்தநாளை கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, தங்கை பிரணவி, அப்பப்பா, அம்மம்மா, பரா மாமா, பாப்பா மாமி, ஆசை மற்றும் உறவினர்கள் ஆலங்கட்டை விநாயகரின் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

(10021)


# யாழ்ப்பாணத்தில்

# பழமரச்செய்கையை ஊக்குவிக்க விவசாயத் திணைக்களம் திட்டம்

மானிப்பாய், மார்ச் 26

பழமரச் செய்கையை ஊக்குவிக்க யாழ்ப்பாணம் விவசாயத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களிலும் உள்ள விவசாய போதனாசிரியர்கள் மூலம் பழமரச் செய்கையாளர்களுக்கு மானியங்கள் வழங்கவும் தோடை, எலுமிச்சை, மா, பலா போன்ற பழக் கன்றுகளை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பழமரச் செய்கையாளர்களுக்கு அவர்களின் செய்கைத் தொகைக்கு ஏற்ப ரூபா 1200 முதல் ரூபா 3500 வரை மானியக்கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளன.

பழ மரச் செய்கையாளர்கள் மேலதிக விவரங்களை தத்தம் பகுதிக் கமநல சேவை நிலையங்களிலும், விவசாய போதனாசிரியர்களிடமும் கேட்டறிந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-90)

# கல்வியும் ஒழுக்கமும் மாணவரின் இரண்டு கண்கள் போன்றவை

## பரிசளிப்பு விழாவில் உரை

''தமிழ் மாணவர்களின் கல்விப் பாதையில் கடந்த காலங்களில் பல இடையூறுகள் ஏற்பட்டன. இன்னும் அவை தொடருகின்றன.

ஆனாலும் அவர்கள் கல்வியையும் ஒழுக்கத்தையும் சமாந்தரப் பணிகளாகக் கொள்வார்களானால் முன்னேற வாய்ப்புகள் உண்டு. கல்வியும் ஒழுக்கமும் மாணவர்களின் இரு கண்களாகும்.''

புளியங்கூடல் இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழா ஒன்றில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. ந. நாகராசா இவ்வாறு கூறினார்.

பரிசளிப்பு விழாவின் இறுதியில் இடம் பெற்ற கலை நிகழ்ச்சிகளின் முக்கிய அம்சமாக சுருவில் இளைஞர் சங்கினர் தயாரித்து வழங்கிய '',உறங்காத உறவுகள்'' என்ற நாடகமும் இடம் பெற்றது. (க-16)


## கேள்விப்பத்திர விற்பனை

''மின்மோட்டார்கள், (5 குவ) தொழிற்சாலையில் உபயோகித்த இரும்பு, கல்வனைஸ், சுசர தொட்டிகள், உபகரணங்கள், இயந்திரங்கள் என்பன கேள்விப்பத்திரம் கோரி விற்பனைசெய்யப்படவுள்ளது.

கேள்விப்பத்திரங்கள் 10-4-89 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கும், பொருட்களை நேரில் பார்வையிடுவதற்கும் காரியாலயம் சமுகமளிக்கவும்.''

**பொதுமுகாமையாளர்,**
மானிப்பாய் பரிஷ்
தெங்கு பனம் பொருள் உற்பத்தி
விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்,
மானிப்பாய்.

(C/2009)


# களப் பயிற்சிகள் இலக்கிய வளர்ச்சிக்கு உதவும்

குருநகர், மார்ச். 26

'உலகம் இலக்கியத்துறையில் மிகவும் விரிந்து உச்சநிலைக்குச் சென்று கொண்டிருக்கையில் நாம் கிணற்றுத் தவளைகளாக இருக்காமல் எம்மை யாற்றியமைக்க இந்த எழுத்தாளர் பட்டறையில் நடைபெறும் களப்பயிற்சி உதவும்.

இத்தகைய இலக்கியம் சார்ந்த பட்டறை முயற்சிகள் விரிவுபடுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.'

யாழ் சென்.பற்றிக்ஸ் வீதி க்கியூடெக் பயிற்சியகத்தில் 'நான்' உளவியல் சஞ்சிகையாளர்களால் நடத்தப்பட்ட எழுத்தாளர் பட்டறை பயிற்சிநெறிக் கருத்தரங்கை நெறிப்படுத்திய கலாநிதி சி. மௌனகுரு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைபவத்துக்கு வண- பிதா வின்சன்பற்றிக் தலைமை வகித்தார்.

கலாநிதி சி. மௌனகுரு தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்:-

'ஆரம்ப எழுத்தாளர்கள் தமது அறிவு, அனுபவம், சிந்தனை. எழுத்தாற்றலை வளர்த்துக் கொள்ளச் சிறந்த எழுத்தாளர்களது எழுத்துக்களை வாசிப்பது மிகச்சிறந்த வழியாகும்' என்றார்.

சிறுகதை, கவிதை, கலை நிகழ்ச்சிகள் பற்றிய பயிற்சி பட்டறையில் பேராசிரியர்கள் அ. சண்முகதாஸ், சபா ஜெயராசா, சி. மௌனகுரு, எம். ஏ. நுஃமான், விரிவுரையாளர்கள் மௌ- சித்திரலேகா, என். சண்முகலிங்கம், க. குணராசா (செங்கையாழியான்) எழுத்தாளர்கள் மயிலங்கூடலூர் நடராசன், கோகிலா மகேந்திரன், சொக்கன் சாந்தன், அ. யேசுராசா, எஸ். தணிகாசலம், சரவையூர் செல்வம், திரு. எஸ். திருச்செல்வம் ஆகியோர் விரிவுரைகளையும், பயிற்சிநெறிகளையும் வழங்கினர், (ச-51)

# யாழ். மத்திய கல்லூரியில் வர்த்தகவெளிக்கள நிலையம்

யாழ்ப்பாணம், மார்ச். 26

வர்த்தக பாடத்துக்கான வெளிக்கள நிலையம் ஒன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் விரைவில் நிறுவப்பட உள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வணிகவியல் வெளிக்கள நிலையத்திற்கான கட்புல சாதனங்களைத் தயாரிப்பதில் பாடசாலைகளில் போட்டி ஒன்றை ஏற்படுத்த வணிகவியல் கல்வி அதிகாரி திரு. எஸ். சிவராசா நடவடிக்கை எடுத்து வருகிறார்.

ஒவ்வொரு பாடசாலையும் ஆண்டு 9, 10, 11 வணிகவியல் பாடத்துக்கமைய சிறந்த கட்புல சாதனங்களைத் தயாரிக்க வேண்டும் என்று சகல வணிகவியல் பாட ஆசிரியர்களையும் திரு. சிவராசா கேட்டுள்ளார்.

கட்புல சாதனங்கள் தனியாகவோ, அல்லது குழுவாகவோ மாணவர்களால் செய்யப்பட வேண்டும்.

சிறப்பான கட்புல சாதனங்களைத்தயாரிப்பவர்களுக்கு நடுவர்களின் தீர்ப்புக்கு அமைய உரிய தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படும். (ச-90)

## காணமற் போனவர்:

# இன்னும் தகவல் இல்லை

சுன்னாகம், மார்ச். 26

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை மனநோய் சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்தசமயம் காணமற்போன ஏழாலை தெற்கைச் சேர்ந்த திரு. து. ஜெயக்குமாரன் (வயது 40] இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை.

கடந்த 17ஆம்திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் காணமல் போயுள்ள இவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சி பலனளிக்காது போயுள்ளதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவரை மீட்டெடுத்துத் தருமாறு வைத்தியசாலையில் முறையிடப்பட்டுள்ளது.

இவர் காணமல்போனதற்கு காரணமாக இருந்தவர்களைக் கண்டறியவும், இனி வருங்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-27)


## R. V. R Engineering Consultants Ltd, VAVUNIYA.

**வேலைவாய்ப்பு - படவரைஞர் (Civil Draughtsman)**

வீட்டுப்படங்கள் கீறி அவற்றிற்கான மதிப்பீடுகள் தயாரிக்கக்கூடிய படவரைஞர் தேவைப்படுகின்றார். தேவையான சான்றிதழ்களுடன் 01-04-1989 சனிக்கிழமை காலை 9 மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்குச் சமுகமளிக்கவும். சம்பள விபரம், தகுதி, திறமை அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

**திருமதி ச. இரத்தினசிங்கம்**
2nd Cross Street,
Vavuniya.

(10405)

## வர்த்தகர்கள், வாடிக்கையாளர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

**நோத் ஸ்ரார் கம்பனி (PVT) லிமிட்டெட், ஜோன்சன் அன் கம்பனி (PVT) லிமிட்டெட் வடமாகாண விநியோகம்.**

நோத் ஸ்ரார் கம்பனியின் உற்பத்திப் பொருட்களினதும், ஜோன்சன் அன் கம்பனி (PVT) லிமிட்டெட் (களனியா) இன் உற்பத்திப் பொருட்களினதும் வடமாகாண விநியோகம் 27-03 89 திங்கட்கிழமை முதல் 02-04-89 ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறமாட்டாது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம்.

தொடர்ந்து 03-04-89 திங்கட்கிழமை முதல் விநியோகம் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

விற்பனை முகாமையாளர்:
**நோத் ஸ்ரார் குறூப் கம்பனிகள்,**
**ஜோன்சன் அன் கம்பனி (PVT) லிமிட்டெட்.**

(10410)

## தொழில் பயிற்சி நெறிகள்

புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பம்

**27-03-1989**

**Motor Winding** — காலம் 4 மாதம்
**House Wiring** — காலம் 3 மாதம்

Details:

**North Ceylon Techaical Institute**
14, St. Peter's Lane.
Hospital Road,
JAFFNA.

(C/2013)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

## ★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விபவவருடம் பங்குனித்திங்கள் 14ஆம் நாள் [27-3-89] திங்கட்கிழமை பகல் 11மணி 11நிமிடம் முதல் 1மணி 13 நிமிடம் வரையுள்ள மிதுன லக்கின
★ சுபமுகூர்த்த வேளையில் ★

| | |
|---|---|
| எமது புத்திரன் திருநிறை செல்வன் | எமது புத்திரி திருநிறை செல்வி |
| **நகுலேஸ்வரன் (கண்ணன்)** | **ஜெயபாமா (பாமா)** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணை கொண்டு வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ மூன்றும் நாள் அதாவது 29-3-89 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு மணமகள் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்:

**திருமதி தம்பையா மகேஸ்வரி, மற்றும் குடும்பத்தினரும்**
பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

**திரு. திருமதி திருநாவுக்கரசு, மற்றும் குடும்பத்தினரும்**
நம்பர் 4, அரசடி லேன்,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

[10392]

## BITSMAN INSTITUTES, MANIPAY

**89 O/L (DAY CLASS)**

எமது வழமையான ஆசிரிய குழுவினால்
ஆரம்பம்: 27-3-1989
[illegible]

(10367)


## புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டம்

# பாதிக்கப்பட்ட வீடுகள், திருத்துதல் புனரமைத்தலுக்கான கடன்கள்

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு ரெபியா (ஆட்கள், சொத்துக்கள், கைத்தொழில் புனரமைப்பு அதிகாரசபை) மூலம் பாதிக்கப்பட்ட வீடுகள், திருத்துதற்கும் புனரமைத்தற்கும் பின்வரும் கடன் வசதியை செய்து கொடுக்கவுள்ளது.

**கடன் தொகை**

| வகை | வருமான வகுப்பு (மாதாந்த வருமானம்) | ஆகக்கூடிய கடன் தொகை | திருப்பிக் கொடுக்கும் கால எல்லை |
|---|---|---|---|
| அ. | ரூபா 701 — 1,500 | ரூபா 15,000 வரை | 15 வருடங்கள் வரை |
| ஆ. | ரூபா 1501 — 5,000 | ரூபா 50,000 வரை | 20 வருடங்கள் வரை |
| இ. | ரூபா 5000 க்கு மேல் | ரூபா150,000 வரை | 20 வருடங்கள் வரை |

கொடுக்கப்படும் தொகை பாதிப்பின் அளவிலும், கடன் பெறுவோரின் திருப்பிக் கொடுக்கும் ஆற்றலிலும் தங்கியிருக்கும். ரூபா 700 க்குக் குறைவாக வருமானம் பெறுகின்ற குடும்பங்கள் ரூபா 15,000/- பெறுமதியான நன்கொடையை மட்டும் பெறுவார்கள். அவர்கள் கடன் பெறுவதற்கு தகைமை பெறமாட்டார்கள்.

**வட்டி வீதம்:** வருடத்திற்கு 6% (ஆறு)

**பிணை:** குறிப்பிட்ட சொத்தையே அல்லது கடன் வழங்கும் நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு பிணையையோ பொறுப்பாகக் கொடுத்தல் வேண்டும்.

**தகைமைகள்:** 1983 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் இற்றை வரை, இடம்பெற்ற இனக்கலவரம், பயங்கரவாத நடவடிக்கைகள் இவை தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றின் ஒன்றினால் வீடு சேதமடைந்து பாதிக்கப்பட்டவர்கள் இக் கடனுக்கு தகுதியுள்ளவர்களாவர். நடைமுறையிலிருந்த இத் திட்டத்தின் கீழ் ஒரு கடன் மட்டுமே வழங்கப்படும்.

**கடன் வழங்கும் நிறுவனங்கள்:**

''அ'' வகைக் கடன்கள்:

தேசிய வீடமைப்பு அதிகார சபை, கூட்டுறவுச் சிக்கனச் சேமிப்புச் சங்கங்கள்.

''ஆ'' ''இ'' வகைக் கடன்கள்:

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஹற்றன் நெசனல் வங்கி, வீடபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், அரச ஈட்டு முதலீட்டு வங்கி.

**செயல்படும் பிரதேசம்:**

சேதமுற்ற வீடுகள் அமைந்துள்ள மாவட்டங்களிலெல்லாம் இத் திட்டம் அமுல் செய்யப்படும்.

**கடன் விண்ணப்பங்கள்:**

இக் கடன்வசதிக்கு தகைமை உடையவர்கள் கிராமசேவை உத்தியோகத்தரிடமும், உதவி அரசாங்க அதிபரிடமும் பதிவு செய்து பாதிப்பின் அளவை அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ் ஒன்றைப் பெற்று பாதிக்கப்பட்ட கட்டடம் அமைந்திருக்கும் இடத்திற்கு அண்மையிலுள்ள வங்கி முகாமையாளரைச் சந்திக்கவும்.

**சி.எச்.எம்.ரி சந்திரசேகர,**
பதில் செயலாளர்,
புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு,
கொழும்பு.

இல. 01, அல்பிரட் கவுஸ் கார்டின்ஸ்,
கொழும்பு-03.

(C/2006)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுவில் மகளிர் கல்லூரி

பயிற்சி நெறிகள்

✶ A. A. T. ✶ N. C. E (Lond)

✶ STENOGRAPHY (Pitmans Lond)

ஆரம்பம்: 05- 04- 1989

இயக்குநர்,
தொடர் கல்விப் பிரிவு.
உடுவில் மகளிர் கல்லூரி.

[10394]


# ஊர்காவற்றுறை, காங்கேசனுக்கு குழாய்நீர் விநியோகத் திட்டம்

## இவ்வருடம் பூர்த்தியாகும்

யாழ்ப்பாணம், மார்ச். 26 ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை ஆகிய பகுதிகளுக்கான குழாய் நீர் விநியோகத் திட்டம் இந்த வருடம் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இரு திட்டங்களும் யூனிசெப் ஸ்தாபனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் 1982ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் தமிழ்ப்பகுதிகளில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக இந்தத் திட்டங்களை உரியகாலத்தில் பூர்த்தி செய்ய முடியாமல் போய் விட்டது.

இதன் நிர்மாண வேலைகள் தற்போது மீண்டும் நடைபெற்று வருகின்றன.

இந்த இரு திட்டங்களையும் பூர்த்தி செய்ய சுமார் ஒரு கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஊர்காவற்றுறை பகுதிக்கான சுத்தமான குடிதண்ணீர் அல்லைப்பிட்டியிலிருந்து பெறப்படும். இதற்கென அல்லைப்பிட்டியில் எட்டு கிணறுகள் நிர்மாணிக்கப்படும்.

ஒன்பது மைல் நீளமான குழாய்கள் வழியாக இந்தத் தண்ணீர் ஊர்காவற்றுறையில் பாரிய தண்ணீர்த் தாங்கிக்கு எடுத்துச் செல்லப்படும்.

பொதுமக்கள் பாவனைக்காக ஐம்பது வீதிக்குழாய்கள் ஊர்காவற்றுறையில் பொருத்தப்பட்டு அதன் மூலம் இந்தத் தண்ணீர் பொதுமக்களுக்கு வழங்கப்படும்.

காங்கேசன்துறை தண்ணீர்த் திட்டத்தின் கீழ் தையிட்டியில் இரண்டு கிணறுகள் நிர்மாணிக்கப்படும்.

அங்கிருந்து தண்ணீர் குழாய் வழியாக காங்கேசன் துறையில் நிர்மாணிக்கப்படும் தண்ணீர்த் தாங்கிக்குப் பாய்ச்சப்படும்.

காங்கேசன்துறையில் சுமார் இருபது வீதிக் குழாய்கள் பொருத்தப்பட்டு அதன் மூலம் தண்ணீர் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும்.

(இ- ஐ)

# யொவன்புர நிகழ்ச்சியில் பங்குபற்றுவோருக்கு காணி

யாழ்ப்பாணம் மார்ச் 26 யொவன் புர 89 கிராந்துருகோட்டை இளைஞர் முகாமில் கலந்து கொள்ளும் வடக்கு, கிழக்கு மாகாணம் மலையகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 26 இளைஞர் யுவதிகளுக்குத் தலா மூன்று ஏக்கர் காணி வழங்கப்படவிருக்கிறது.

இக்காணிகளை வழங்கி மகாவலி இளைஞர் கிராமம்ஒன்றை அமைக்க மகாவலி துணை அமைச்சர் திரு. காமினி அத்துக் கோரளை நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இம் மாதம் 29 ஆம் திகதி முதல் ஏப்ரல் முதலாம் திகதி வரை மகாவலி மைதானத்தில் யொவன் புர 89 இளைஞர் முகாம் நடைபெறும்.

[ச)

## மக்கள் முகம்

### யாழ் இந்து அபி. சபை

யாழ்ப்பாணம், மார்ச், 26 யாழ் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டம் இம்மாதம் 8 ஆம் திகதி புதன்கிழமை கல்லூரி அதிபர் திரு எஸ். பொன்னம்பலம் தலைமையில் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருடப் பதவியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ச. பொன்னம்பலம் (அதிபர்) செயலாளர்: க. பூபாலசிங்கம் பொருளாளர்: க. கனகசிங்கம்,

செயற்குழு:- சு.டிவகலாலா, இ. சங்கர், செ. கனகரத்தினம், இராஜராஜேஸ்வரன் தங்கராசா, க, பேரம்பலம், ஜ. ரி. சம்பந்தன், சே. பஞ்சரத்தினம், ந. வித்தியாதரன், ப. ஸ்ரீதரன், சு. சிவசுப்பிரமணியம், என். சோமசுந்தரம். பொ. மகேந்திரன், எஸ். ஜெகானந்தகுரு, புலவர் சி. செ. சோமசுந்தரம், பொ. ஸ்ரீஸ்கந்தராஜா, எஸ். சிவராசா, ரி. துரைராசா, ரி. கமலநாதன்,

கணக்காய்வாளர்கள்:- சே. சிவசுப்பிரமணியசர்மா, என். உலகநாதன், திருமதி பொ. பத்மநாதன். (உ)

# யாழ். முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

## முஸ்லிம் காங்கிரஸ் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், மார்ச். 26 யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகிறது. கல்வி, உத்தியோகம், தொழில் போன்ற விடயங்களில் நாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

அண்மையில் வழங்கப்பட்ட ஆரம்ப ஆசிரியர் நியமனத்தில் யாழ் மாவட்டத்திலிருந்து ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தெரிவு செய்யப்பட்டபோது ஒரே ஒரு முஸ்லிம் ஆசிரியரே தெரிவு செய்யப்பட்டார்.

அண்மையில் யாழ் முஸ்லிம் பகுதியில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் கூட்டம் ஒன்றுக்குத் தலைமை வகித்த ஜனாப் எம். எஸ். அமானுல்லா மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் அங்கத்தவராக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் வடபகுதி முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அமைப்பாளர் திரு. ஞானச்சந்திரனை நியமனம் செய்யுமாறு கோரும் தீர்மானம் ஒன்றும் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.


## கேள்விப் பத்திர அறிவித்தல்

### நீர்ப்பாசனத் திணைக்களம் கிளிநொச்சிப் பிரிவு

நீர்ப்பாசனப் பொறியியலாளர் கிளிநொச்சிப் பிரிவினால் புனருத்தாரண உதவித்திட்ட வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரங்கள் 11- 04- 89 தொடக்கம் 20- 04- 89வரை வேலை நாட்களில் காலை 9.00மணி முதல் மாலை 3.00மணிவரை பிரதிப்பணிப்பாளர் நீர்ப்பாசன இலாகா கிளிநொச்சியில் பெற்று, 1989ஆம்ஆண்டு ஏப்பிரல் மாதம் 26ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை நீர்ப்பாசனப் பொறியியலாளர், கிளிநொச்சிப் பிரிவில் வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எந்திரி என். ஜே. நவரட்ணராஜா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கிளிநொச்சிப் பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
இல. 315, கண்டி வீதி,
பரந்தன்.
1989- 03- 15.

(C/1572)



## வெல் நோண்

கோண்டாவில்

### கலை, வர்த்தக வகுப்புக்கள்

91 A/L

சகல பாடங்களும் கற்பிக்கப்படும்

| | |
|---|---|
| பொருளியல்: - | உதயன் |
| கணக்கியல்:- | சௌந்தி |
| வர்த்தகம்:- | பசில் ஜனதாஸ் |
| அளவையியல்:- | கேசவன் |
| தமிழ் / இந்து நாகரிகம் | பாலா |

ஆரம்பம்: 28-03-89

மாலை 3.00 மணி

[10388]



# 'ஷப்ரு'' வழங்கும் புதிய வட்டி வீதம்

## நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2.230,000 | 4.365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,386,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577,482 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,283,918 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,718 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,879 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

நம்பிக்கையுடன் சேமிக்க

"ஷப்ரு" வை நாடுங்கள்

நிதித்துறையில் உங்கள் நண்பன் அவனே!

பணிப்பளர் சபை

திரு. எல். ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
(A. I. B. Lond.),
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B. Lond.),
பொது முகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி
(B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

# SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073, 24803

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4
தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ கானமூர்த்தி - பஞ்சமூர்த்தி இணைவின் வெள்ளிவிழா மலர் ★

## ஈழத்து இசை வளர்ச்சிக்கு மூர்த்திகள் பெரும் பணி

கோண்டாவில் கானமூர்த்தி - பஞ்சமூர்த்தி சகோதரர்களை நான் இளமைக் காலந்தொட்டு நன்கு அறிவேன். தந்தையார் கோதண்டபாணி நல்ல ஞானஸ்தர். குலவித்தை கல்லாமல் பாகம் பெறும் என்பர்.

கானமூர்த்தியின் வாசிப்பு அனுபவ மெருகேறியது. சதா துருதுருவென்று புதிய சங்கதிகளைக் கற்கும் ஆர்வமுடையவர் பஞ்சமூர்த்தி.

ஈழத்து இசைக்கலை வளர்ச்சிக்கு இவர்கள் அரும் பணியாற்றியுள்ளார்கள்.

இவர்கள் இன்னும் வளர்ந்து, பெரும் சாதனைகள் புரியவேண்டுமென்று — ஒரு மூத்த கலைஞன் என்ற முறையில் — ஆசீர்வதிக்கின்றேன்.

'நாதஸ்வர கலாநிதி'
**என். கே. பத்மநாதன்**

## இணைந்து நாதமழை பொழியும் நாதஸ்வர இளவரசர்கள்

**கனகசபாபதி நாகேஸ்வரன் எம். ஏ.**

மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிதென்பார்கள். மூர்த்தி கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி விக்கிரவியலில் மூர்த்தியென்பது இறைவனது திருவுருவினைக் குறிக்கும் சொல். மூர்த்தி பேதங்களும் தலத்திற்குத் தலம் உண்டு. மூர்த்திச் சிறப்பினாற் புகழ்பெற்ற தலங்கள் இலங்கையிலும் உண்டு. பேதமற்ற மூர்த்திகளாக கருத்தொருமித்த மூர்த்திகளாக மிளிர்ந்து தமிழகத்து நாதஸ்வர வித்துவான்களோடு ஈடுகொடுத்து நாதமழை பொழியும் நாதஸ்வர இளவரசர்களான கோண்டாவில் வீ. கே. கானமூர்த்தி, வீ.கே. பஞ்சமூர்த்தி சகோதரர்கள் பல வழிகளிலும் இசைத்துறையில் கீர்த்தியுடன் விளங்குகின்றனர்.

நாதமழை பொழியும் இளம் இசைமணிகள், இணைந்து எம்பெருமானைச் சேவிக்கும் கலைப்பணியில் கால்நூற்றாண்டுகளுக்கும் மேலாக இசைப் பணி புரிந்துவரும் சிறப்புப் பாராட்டப்பட வேண்டியது அவசியம் வேண்டப்படும் ஒரு கலை நிகழ்வாகின்றது. இப் பாராட்டுப் பணியில் முயன்றுள்ள கலையுள்ளங்களின் கலைப்பணி மேன்மேலும் விரிந்து சிறந்தோங்க வேண்டுமென்றே 'கலைவாணி'யும் கருதுகின்றாள். கலைபுரக்கும் புரவலரும் கலைக்காவலரும இணையும் வைபவம் கலைக் கண்களுக்கெல்லாம் பெரு விருந்தாயமைகின்றது.

'மூச்சுப்பிடித்து' வாசித்து அதிலே சாதனைகள் புரிந்து முன்னேறிவரும் இளங்கலைஞர்கள் தமது கலையினையே தெய்வமெனப் போற்றிவரும் பெற்றியினர். நாதஸ்வரம் மங்களவாத்தியமாகும். ஆலயங்களிலே இறைவனுக்கு நிகழும் பூசைக்கு வாசிக்கப்படும் இராஜவாத்தியமுமாகும். நாதஸ்வரத்திற்கு முழவு தவில், நாதஸ்வரமும் தவிலும் இணைந்தும் தனித்தும் இயலுவன. எனவே தனித்தனி இரண்டுமே தனித்துவம் பொருந்தியனவாம். குழல் வாத்தியம் நாதஸ்வரம். திமிரி, பாரியென இருவகையான நாதஸ்வரமுண்டு. இலங்கையில் இன்றும் மூத்த நாதஸ்வரக் கலைஞர்களும் இளங்கலைஞர்களும் இவ்விருவகை நாதஸ்வரங்களையும் கையாண்டு பெருமை பெறுகின்றனர்.

நாதஸ்வரமும் தவிலும் 'சிட்சை' முறையில் குருவிடமிருந்து வரன்முறையான பாடங்களுடன் படிக்கவேண்டிய கலைகளாகும். இக்கலை மேலோங்கிக் கீர்த்தியும் - புகழ்ச்சியும் பெறும் கலைஞர்கள் தத்தம் 'குரு'மாரையும் மேலான பெயரோடு வாழ்விக்கின்றனர்.

அதாவது 'இன்னாரின்சீடன்' என்பதால் அக்குருவினது

[7 ஆம் பக்கம் பார்க்க]



## எமக்கும் எம் நாட்டுக்கும் பெருமைதரும் கலைஞர்கள்

பண்டு தொட்டுத் தமிழ் நாட்டில் வழங்கி வந்த மங்கள வாத்தியமாம் நாதஸ்வரத்தைக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இலங்கையிலும் பிறநாடுகளிலும் மிகவும் சிறப்புற வாசித்துப் புகழ்மாலைசூடி எமக்கும் எமது நாட்டுக்கும் பெருமைதேடித் தந்தவர்களுள் கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்கள் இருவராவர்.

நமது நாட்டில் இருந்த, இருக்கின்ற கலைஞர்களில் ஒரு சில நாதஸ்வர, தவில் வித்துவான்கள் மட்டுமே தமிழ் நாட்டிலுள்ள பெரிய வித்வான்களுக்குத் தாம் எவ்விதத்திலும் சளைத்தவர்களல்ல என்று உலகுக்கு எடுத்துக்காட்டி அவர்களுக்கு இணையாக நின்று பிரசித்தி பெற்றவர்களாவர். இந்த வரிசையில் இவ்விளைஞர்கள் இருவரும் விரைவில் தமக்கும் ஒரு நிரந்தர இடத்தைப் பிடித்து வைத்துக் கொள்ள வேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**டபிள்யூ. எஸ். செந்தில்நாதன்**
நிர்வாக ஆசிரியர், ''பல்லவி''

## வளர்மதியின் வாழ்த்து

(ஆசிரியப்பா)

இசையும் கூத்தும் இயலும் கொழிக்க
வகையிற் புகழுடன் வயங்கும் இணுவிற்
பதியிற் தலைமுறை பலப்பல வாக
வதிந்தின் கலைகள் வானுற வளர்க்கும்
குடியில் வந்து குலத்தொழில் மறையா
தடியடி யாகக் காத்து வந்த
விசுவ லிங்கம் எனும்பெயர்ச் செம்மல்
மகவாய்ப் பிறந்து மாண்புடன் பிறங்கிய
கோதண்ட பாணி எனும்பேர் கொண்ட
நாத சுவர மேதையின் வழியில்
வந்திவன் தோன்றிக் கால்நா ருண்டாய்த்
தந்நிகர் இல்லா மேதைக ளாகத்
தமிழினம் வதியும் இடங்களி லெல்லாம்
அமிர்த மழையென நாத சுரத்தில்
கான மழையினை வாரி வழங்கும்
கான மூர்த்தி பஞ்ச மூர்த்தி
சீரும் சிறப்புமாய் நெடுநாள் வாழ்ந்து
பேரும் புகழும் பெருக நிலைத்திட
வேண்டு மென்ன எல்லாம் வல்ல
ஆண்டவன் தன்னை வேண்டு கின்றோம்:

**வளர்மதி முன்னேற்றக் கழகமும்
சனசமூக நிலையமும்**
சம்பியன் லேன், கொக்குவில்.

## தேவகானம் இசைக்கும் இருவர்

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர், துர்க்காதேவி [தேவஸ்தானம்
தெல்லிப்பழை

'குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொற் கேளாதவர்' என்பது வள்ளுவர் பொதுமறை. இசையின் இனிமைக்கு முதலில் குழலையே எடுத்துக் காட்டுகிறார் இப்புலவர். துணைக் கருவிகளின் மங்கல வாத்திய இசையாகப் போற்றப்படுவது நாதஸ்வரமாகும்,

திருக்கோயில்களில் இவ் இசைக்கு முக்கிய இடமுண்டு. இறைவனையும் எம்மையும் இசைவிக்கும் சக்தி இதற்கு உண்டு. இதனாலேயே 'நாதோபாசனை' என்றும் ''நாத அஞ்சலி'' என்றும் இவ் இசையை வியந்து போற்றுவர். 'நாதம்' என்பது எமது சமயத்தின் உயர்ந்த தத்துவமாகும். இதனை உணர்த்தும் திவ்விய நாமத்தைக் கொண்டது நாதஸ்வரம்.

இக்கலையை முறையாகப் பயின்று ஒழுங்காக வெளிப்படுத்தும் சிறப்பு கானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரருக்கு உண்டு. அன்னையின் அரவணைப்பும் அன்பர்களின் ஆதரவும் ரசிகப் பெருமக்களின்

[7 ஆம் பக்கம் பார்க்க)

## இசை உலகில் விடிவெள்ளிகள்!

**எஸ். ஆர். ஞானசுந்தரம்**
[கௌரவ செயலாளர்
இலங்கை இசை வேளாளர் சங்கம்]

ஈழத்தில் கர்நாடக சங்கீத மரபைப் பேணிக்காத்து, பாரம்பரியமான — நாகசுர - தவில் கலை அழியாது மேலோங்கி வளர இசையாளர் சமூகம் ஆற்றி வரும் பணி அளப்பரியது.

இச் சமூகத்தில் காலத்திற்குக் காலம் பல்வேறு சிறந்த நாகசுர - தவில் கலைஞர்கள் தோன்றி கலையில் மேன்மை பெற்று திகழ்ந்ததுடன் எமக்கு பெருமையும் தேடித்தந்தனர்.

இந்த வரிசையில் இன்று வெள்ளி விழாக்காணும் கோண்டாவில் நாகசுர மேதைகள் வி. கே. கானமூர்த்தி, வி. கே. பஞ்சமூர்த்தி ஆகியோர் இன்றைய இசையுலகில் விடி வெள்ளிகளாகத் திகழ்கிறார்கள். இந்திய மரபைப் பேணி இவ்விரு சகோதரர்களும் ஒன்றாக இணைந்து கால் நூற்றாண்டு காலம் இசைப் பணி ஆற்றியமை பெரிதும் பாராட்டுதற்குரியது.

வெள்ளி விழாக்காணும் இக் கலைஞர்கள் எதிர்காலத்திலும் இணைபிரியா சகோதரர்களாக நீடூழி வாழ்ந்து இசை உலகுக்கு பெரும்பணி ஆற்றிக் கலையின் பெருமையையும், சமூகத்தின் பெருமையையும் நிலைநாட்ட எல்லாம் வல்ல இறைவன் அருள் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

## இருசுடர்கள் வாழ்க! வாழ்க!!

நாகசுர கானத்தில் மூர்த்தி யாகி
நாகசுர மிணைந்த இரு மூர்த்தி யாகி
நாகசுர ஞானத்தின் ஊற்றாய் நிற்கும்
நாகசுர மூர்த்திகளே வாழ்க! வாழ்க!!

இருபத்து ஐந்தாண்டு இணைந்தி சைத்து
இருசுடராய் இனிய இசை இசைக்கும் நல்ல
பிஞ்சுமன சோதரரின் பெருமை சொல்ல
வாஞ்சையுடன் வெள்ளிவிழா ஏற்றும் ஏற்றம்!

நேர் கொண்ட நாகசுரம் வார் கொண்ட தவில் வாத்யம்
ஊர்கின்ற ஒத்தூதல் உணர்த்துதரு தாளமதில்
சேர்கின்ற சீரிசையில் சிந்துவது மங்கலமே!
பார்வாழ நாளெல்லாம் மங்களமே சேருகவே!

கானு மிருதத்தில் கான மூர்த்தி
இசைப் பஞ்ச கருவிகள் காண்பவன் பஞ்சமூர்த்தி
ஏழிசை மன்னர்காள்!
எங்கும் என்றும்
இசைத் தேனுக வாழுக!
திருவருள் துணை நலம்.

நாகசு ரத்தவில் வாத்யமுக்கி யத்துவம்
தாகமெ டுத்துவ டித்த வகுப்பது
துர்க்கா தேவிவாழ் தெல்லிபு ரத்தினில்
கற்கப் பற்பலர் கூடினர் தேடினர்
பாகம் பாகமாய் பயிலுனர் பயின்றிட
உதவுக! உம்பணி தெய்வப் பணியதே!

ஈ. பெர. பாலலிங்கம்

கானமூர்த்தி பஞ்சமூர்த்தி
சகோதரர்களின்
★ வெள்ளி விழா ★
சிறப்படைய
வாழ்த்துகின்றோம்
★★★★★★★★ ★★★★★★★★
ராஜ் மோட்டோ
நந்தாவில்
கொக்குவில்.

ஸ்ரீ துர்க்கா
வெல்டிங் வேக்ஸ்
கே. கே. எஸ். வீதி,
தாவடி.
கிளை:
கோபால் இரும்புத்தொழிற்சாலை
புகையிரத வீதி,
கோண்டாவில்.

" இயந்திரம்ஸ் "
336 மணிக்கூட்டு வீதி,
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

மொடேண் பேணிச்சர்
79/2 (129) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

We wish Kanamoorthy and Panchamoorthy brothers success in the endeavours.
City Contractors
Designers, Estimaters — Kokuvil
CONSULTANTS
and
CONTRACTORS
for
BUILDINGS ROADS
BRIDGES ELECTRICAL
and
IRRIGATION WORKS

கொக்குவில் வளர்மதி
முன்னேற்றக்கழகமும்
சனசமூக நிலையமும்
சம்பியன் லேன்,
கொக்குவில்.

நாகபூஷணி அம்மன்
பரிபாலனசபை
கோண்டாவில் - கிழக்கு,
கோண்டாவில்.

அஜித்தா சுவீட்ஸ் & ரொபி
S. R. இன்டஸ்றீஸ்
குளப்பிட்டி,
கொக்குவில்.

மயில்வாகனம் ஸ்ரோர்ஸ்
கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு.

ELECTRONIC
SERVICE CENTRE
Radio, T. V. Video Tape Recorders
Audio Tape Recorders Stereo HI. FI
Amplifiers, Record Players.
Calculators Computors Etc.
3rd Mile, Point Pedro Road,
KALVIYANKADU. (Jaffna)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேவை

1. அன்னை சாரதா தேவி கோவில் கட்ட திறமை மிக்க சிற்பாசாரியார்.

2. லண்டன் விம்பிள்டன் கணபதி கோயிலுக்கு சைவக் குருக்கள்—வயது 22-30 (விவாகமாகாதவர்) அநுபவம், சான்றிதழ்களுடன் 05-04-89 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

செயலாளர்,
ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

(10166)

## சீட்டிழுப்பு முடிவுகள்

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட சீட்டிழுப்பு முடிவுகள்:

முதலாம் பரிசு இல. 1435
இரண்டாம் பரிசு இல. 0542
மூன்றும் பரிசு இல. 2030

— தலைவர்

(10402)

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



**R. T. A. பொன்னம்பலம்**
(பிரபல வர்த்தகர், நொச்சியாகம)

தோற்றம்: 13 - 06 - 1955
மறைவு: 24 - 02 - 1989

பாசத்தின் குலவிளக்கே பொன்னு!
நின் பாதை மாறியதோ பாராய்
நின் காலடி ஓசை கேட்டிருப்போம்
கலங்கரை விளக்குப் போல் ஒளியாகினாய்
காலம் எல்லாம் உனக்காகக் காத்திருந்தோம்
பெருங் காலன் வசப்பட்டுவிட்ட செய்தியோடா!
கலங்கிய எமக்கிங்கே காலமெல்லாம் நீயேதான்
உன்னை எண்ணி வாடி நிற்கும் உயிர்களுக்கு என்னபதில்?
உன் நினைவால் வாடி நிற்கும்

மனைவி, மக்கள்,
R. T. ஆறுமுகம் குடும்பத்தினர்,
ஆறுமுகம் சங்கரப்பிள்ளை குடும்பத்தினர்,
அண்ணன்மார், தங்கைமார், மச்சான்மார்,
மாமியார், மச்சாள்மார், உற்றார் உறவினர்கள்,
நண்பர்கள்.

சின்னவடி,
காரைநகர்.

(10407)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பொன்மலர்
யோசெப்பின் யோசேப்

தோற்றம்: 10-11-1932
மறைவு: 26-03-1987

அன்னையே எங்கள் அன்புத் தெய்வமே! அன்புடனும் பண்புடனும், பாசத்துடனும் எங்களுக்காய் வாழ்ந்தவளே, நாங்கள் உங்களுக்காய் அழுவது வாழ்க்கையாயிற்று. தங்கள் ஆத்மா சாந்தியடைய எந்நாளும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புக் கணவர்,
பிள்ளைகள், மருமகன்மார்
மருமகள்.

(9957)

இன்று வெள்ளி விழாக்காணும் திருவாளர்கள்
V K. கானமூர்த்தி பஞ்சமூர்த்தி
சகோதரர்களுக்கு
எமது உள்ளம் நிறைந்த

**✵ நல் வாழ்த்துக்கள் ✵**

## சிங்கம் பார்மஸி

25, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(10406)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**முத்தையா இராசசிங்கம்**
(இராசா- M. R.)
(முருகன் ஸ்ரோர் உரிமையாளர், நவாலி.)

வையத்தில் அறிமுகம்: 12 - 8 - 1940
தெய்வத்தில் சங்கமம்: 27 - 12 - 1988
திதி 26 - 3 - 89

காலமுண்டு கழிந்தாலும், அகிலமே அழிந்திடினும் நூறாண்டு சென்றாலும் மாறாது எம்துயரம்! மரணம் நிச்சயமே மறக்கத்தான் முடியாதே, தருணம் இதுவல்ல தவிக்கின்றோம் உன் பிரிவால்! திண்தோள் வலி வேந்தே! திறன் மிக்க இராசாவே! தூண்டாமணி விளக்கே! துணிவின் குலவேந்தே! கட்டுக்கோபுரமே! கம்பீர மன்மதனே! கண்ணீர்க் கடலில் கதறவிட்டு நீண்டதுயில் கொண்டதேனோ? பண்பான வார்த்தைகளும் கம்பீரத் தோற்றமும் கண்ணிறைந்து நிற்குதையா! என் இராசவே! இமயமலை சரிந்ததையா! இதயங்கள் வெடித்ததையா! வேதனையால் வாடுகின்றோம் வெந்து மனம் ஏங்குகின்றோம் இப்பிறப்பில் உம்நினைவை எப்படித்தான் மறப்போமோ.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் வாடும்:
தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
மருமக்கள், பெறமக்கள், உற்றார், உறவினர்.

நவாலி அரசடி,
மானிப்பாய்.

(10368)

## குளிர்த்தி விழா

யாழ்ப்பாணம், மார்ச். 26

அளவெட்டி வடக்கு நவணக்கிரி முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த குளிர்த்தி விழா நாளை திங்கட்கிழமை நடைபெறும். [க]

## சேந்தாங்குளம் அப்போஸ்தலர் சபை ஆராதனை

யாழ்ப்பாணம், மார்ச். 26

உயிர்த்தெழுந்த ஞாயிறு காலை 9 - 00 மணிக்கு, சேந்தாங்குளம் - இளவாலை அப்போஸ்தல சபை திறப்புவிழா ஆராதனை நடைபெறும்.

ஆராதனையில் யாழ் அப்போஸ்தல சபையின் மாவட்டப்போதகர் ரி. எல். தாசன் சிறப்புச் செய்தி அளிப்பார் யாழ் சுண்டுக்குளி சந்தியில் இருந்து ஞாயிறு காலை 8-30 மணிக்கு விசேட பஸ் சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (இ)

## ஸ்கந்தா சாம்பியனானது

சுன்னாகம், மார்ச். 26

அளவெட்டி டயமன் கழகம் நடத்திய நொக் அவுட் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் கந்தரோடை ஸ்கந்தா விளையாட்டுக்கழக இரண்டாம் பிரிவு அணி சாம்பியனானது. அளவெட்டி கலைவாணி வி. க அணியை எதிர்த்து விளையாடிய ஸ்கந்தா அணி 2:0 என்ற கோல்களைப் போட்டு வெற்றி பெற்றது. அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இப்போட்டி நடைபெற்றது. [க-27]

## விளையாட்டுப் போட்டி

சுன்னாகம், மார்ச். 26

ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களின் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி புதன் அன்று பிற்பகல் மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. எஸ் தனஞ்செயன் தலைமையில் நடைபெறும்.

வைபவத்தில் யாழ். கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு. க. புலேந்திரன், கல்வி அதிகாரி (உடற்கல்வி) திரு. த அருணகிரிராஜா, உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு அதிகாரி திருமதி கே. கெங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ள இருக்கின்றனர். [க-27]

## சிங்கப்பூர் மலேசியாவில் வேலைவாய்ப்பு

**JOHOR BAHRU-**
**PALM OIL SECTIION**

வேலைக்கு ஆட்கள் தேவை.

செல்ல விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
(31 - 3 - 1989 க்கு இடையில்)

**அல்டி டிவல்லவ்ஸ்,**
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.
(LABOUR LICENCE No: 15..)

(10404)

## இறையன்பில் இணைந்த 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



படைப்பு: 21- 10- 1950
அழிப்பு: 27 - 03- 1984

உயர்திரு. R. A. பிரான்சிஸ் றணசிங்க
[Police Sergent, Jaffna Police Station]

'நினையாத நேரம் அணைந்த எம் ஒளிவிளக்கே!
நினைக்காத நேரமும் இல்லை எமக்கே'

எமக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈந்த எமது அன்பு பப்பாவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்!


இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 6-30 மணிக்கு திருப்பலிப்பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

என்றும் உம் நினைவிலும் வழியிலும் வாழும்:
அன்பு மனைவி; ஆசை மழலைகள்;
அருமை அம்மா; தங்கை;
மைத்துனர்; மைத்துனிமார்.

துண்டி றோட்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(10163)

## 31ஆம்நாள் நினைவஞ்சலி



**செல்வன் பாலசிங்கம் சிவகுமாரன்**
(வைமன் வீதி, நல்லூர்)

தோற்றம்:- 01-06-1965 நிறைவு:- 24-02-1989

அன்புடையீர்!

எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு சிவபதம் அடைந்த எம் அன்புப் புதல்வனின் செய்தி கேட்டு, நேரிலும், கடிதம் தந்திகள் மூலமும் ஆறுதல் சொன்ன அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் 26 - 03 - 89 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்தில் கலந்து, அவரது ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

V. S. பாலசிங்கம் குடும்பத்தினர்

8/1, வைமன் வீதி,
நல்லூர்.

(C/2014)

## கேள்விப்பத்திர அறிவித்தல்

**புனரமைப்பு, திருத்தி அமைப்பு வேலைத்திட்டம்**
**ஆசிய அபிவிருத்தி வங்கி உதவித் திட்டத்தின்கீழ் கமநல சேவை நிலைய திருத்த வேலைகள்.**

### கமநல சேவைகள் திணைக்களம், யாழ் மாவட்டம்

கீழ்க்காணும் திருத்த வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் யாழ். மாவட்ட கமநல சேவைகள் சிரேட்ட உதவி ஆணையாளர் அவர்களால் 1989. 04. 10 ஆம் திகதி ந. ப. 12. 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கிடைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1989. 04. 10 ஆம் திகதி பி. ப. 2, 00 மணிக்கு யாழ் மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள அலுவலகத்தில் திறக்கப்படும்.

| வேலையின் பெயர் | கேள்விப்பத்திர வைப்புப்பணம் | பதிவுசெய்யப்பட்ட ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|
| உடுவில் கமநல சேவை நிலைய கட்டிட திருத்த வேலைகள் | ரூபா 500/- | ரூபா 450, 000/- |

2. கேள்விப்பத்திர படிவங்கள் 1989. 04 07 ஆம் திகதி பி. ப, 2.00 மணிவரை பதிவு செய்துகொள்ளப்பட்ட அத்தாட்சியை நிரூபிக்கும்பட்சத்திலும், ஒவ்வொரு வேலைக்கும் ரூபா. 25/- மீளளிக்கப்படாத கேள்விப் பணமாக செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும், மீளளிப்பு வைப்புப்பணமாக மேலே காட்டப்பட்ட தொகையை இவ்வலுவலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் அத்தாட்சியாக காண்பிக்கும் பட்சத்தில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளான பிணைப்பணம் செலுத்துதலும் மீளளிப்பு கேள்விப்பணம் செலுத்தலும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு தேவையில்லை.

4. மேலதிக விபரங்கள் இவ்வலுவலகத்தில் அலுவலக நாட்களில் காலை 8-30 மணியிலிருந்து மாலை 4. 15 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

க. பரமலிங்கம்
சிரேட்ட உதவி ஆணையாளர்,
கமநல சேவை,
யாழ்/ மாவட்டம்.

கமநல சேவைகள் திணைக்களம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
1989. 03. 23.

(C/2012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:-**

யாண்டுச்சென்று யாண்டும் உளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட்டவர்.

**பொருள்:-**

ஐம்புல ஆசைக் குற்றங்களையும் அடக்கியாளும் வேந்தராகிய பெரியாருக்கு வருத்தம் உண்டாக்குகிறவர்கள் எங்கே போனாலும் எங்கும் சுகமாக இருக்க முடியாது.

உதயன்

உண்மை - நிதானம் - நடுநிலைமை

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073

26 - 03 - 1989 த. பெ. இல: 23

## கலைகளை வளர்ப்போம்

ஈழத்தின் தலைசிறந்த இசைக்கலைஞர்கள் இருவர் இன்று பாராட்டப்படுகிறார்கள். இளங்கலைஞர்களான அவர்கள் கானவிருந்து அளிக்கத் தொடங்கி பஞ்ச - தர - பஞ்ச ஆண்டுகள் நிறைவுறுவதை ஒட்டி இந்தப் பாராட்டு விழா நடக்கிறது.

ஆம்! கானமூர்த்தி - பஞ்சமூர்த்தி சகோதரர்கள், ஈழத்தில் மட்டுமன்றி வெளிநாடுகள் பலவற்றிலும் தமது கலைத்திறமையைக் காட்டி, முத்திரை பொறித்து, பிறந்த மண்ணுக்குப் புகழ் தேடித் தந்தவர்கள்.

நாதஸ்வரம் தமிழ் மக்களின் மங்கள வாத்தியம். அதன் மென்மையான, நுண்ணியதான கானம், காதில் வந்து பாயும்போது உடம்பின் இரத்த நாளங்கள் புடைத்துப் புளகாங்கிதம் அடைகின்றன! அதனை ரசித்துக் கேட்பவர்கள், அந்தக் கானத்துடன் ஒன்றித்து, லயித்து விடுகிறார்கள். மனமும், உடலும் ஒன்றித்து இறைவனைத்தேட உதவும் தேவகானமே நாதஸ்வரம் எனலாம். இதனை எழுத்தில் வடிப்பதை விட ரசித்து உய்த்து உணருதலே பெரும் பேறாகும்.

பரம்பொருளான இறைவனை இசைவிக்க உதவுவது இசை. மனிதர்களின் மனம் ஒருமுகப்பட உதவி இறைவனை எண்ணுவதற்காக அதனை ஒன்றிக்கச் செய்வதும் இசை. மனித நாடி நரம்புகளில் மட்டுமன்றி, மிருகங்களின் உணர்வை ஈர்த்து இழுப்பதற்கு மட்டுமன்றி, தாவரங்கள் — பயிர்கள் செழித்து வளரவும் இசை ஊட்டமளிக்கிறது.

இசை தெய்வீகக் கலையாக மதிக்கப்படுகிறது. ஆலயங்கள், மற்றும் வணக்க ஸ்தலங்களில் எல்லாம் இறைவன் புகழ்பாட இசையே பயன்படுத்தப்படுகிறது. இந்து ஆலயங்களில், சைவக் கோயில்களில் நாதப் பிரம்மமான இறைவனை இசைபட வைக்க நாதஸ்வர ஓசை பிரதானமாக விளங்குகிறது.

இத்தகைய சிறப்புமிக்க தமிழர்களின் தனித்துவமான இசைக்கலையாக விளங்கும் நாதஸ்வரக் கலை, ஈழத் தமிழ் மண்ணில் இப்போது உரிய ஆதரவின்றி, வளர்ச்சி காணாது நலிந்து போவது கவலைக்குரியதாகும்.

குரு - சிஷ்ய முறையில் வளர்க்கப்பட்டு வந்த இக்கலை, எமது மண்ணில் புரவலரும், ஆதரவும் இல்லாத பின்னணியில் இப்போது மிகவும் நொந்துபோய் உள்ளது. பாலைவனத்திடையே ஒரு நிழல் தரு மரம்போல, தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில், யாழ். மாவட்டக் கலாசாரப்பேரவை எடுத்த முயற்சியால், நாதஸ்வர - தவில் பயிற்சிப் பாடசாலை ஒன்று இயங்கி வருகிறது. எனினும் யாழ்ப்பாண நுண்கலைப் பீடத்தில் இத்துறையும் சேர்க்கப்பட்டு போதிக்கப்படுவது அவசியம், அப்போதுதான் நாதஸ்வர - தவில் கலையை உரிய அந்தஸ்து வழங்கிப் பேணிப் பாதுகாக்க வாய்ப்புகள் உண்டாகும். பஞ்சமூர்த்தி—கானமூர்த்தி போன்ற கலைஞர்களை உருவாக்க — உதவ முடியும்.

முந்திய காலங்களில் கலைகளை, அரசர்களே ஆதரித்தும், பேணியும் வளர்த்தும் வந்தார்கள், இப்போதெல்லாம் அந்தப்பணிகளை அரசாங்கங்கள் செய்து வருகின்றன.

ஆனால் ஈழத்தில் தமிழர் கலைகளை தமிழர்களே தனித்து நின்று பாதுகாத்து, பேணி, வளர்க்க வேண்டிய கவலைக்குரிய நிலை. இந்தப் பணிகளில் கலை ஆர்வலர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் சமூக பண்பாட்டு நல அமைப்புகளுக்கும் பெரும் பங்கு உண்டு.

கலைஞர்களை வாழும் போதே கௌரவிக்கும் பழக்கம் இப்போது பரவி வருவது வரவேற்கத்தக்கது. அந்த வகையில் பிரபலமானவர்களை மட்டுமன்றி, இலைமறை காய்போல உள்ள இளங்கலைஞர்களையும் பாராட்டி ஊக்குவிக்க வேண்டும். கலைகளும், கலைஞர்களும் வாழத் திறமை அறிந்து பாராட்டுதல் பெரிதும் உதவிடும், வித்துவக் காய்ச்சல் கலைஞர்களிடையே பரவாது பார்த்துக் கொண்டு, இப்பணியில் கலை ஆர்வலர்கள் மென்மேலும் ஈடுபடுவார்களாக. அது கலைகளை மதிப்பதாகும்; சிறப்பிடம் தருவதுமாகும்.

## உயிர்த்தெழுவோம்

★★★★★

வாழும் வகைகள் பலதிருக்க — நாம்
வழிகள் தவறிச் சென்று விட்டோம்
சூழும் பாவக் கொடுமையினால் — ஆன்ம
சுகங்கள் யாவும் இழந்து விட்டோம்.

ஆசைக் சயிற்று மோசமுற்ற — எம்
ஆன்ம இழப்பை மீட்பதற்கே
ஈசன் உலகில் உயிர் நீத்து — பின்
சாவையும் வென்று உயிர்த்தெழுந்தார்.

உயிர்ப்பால் இழப்பை மீட்டளித்த — எம்
உத்தான யேசுவின் உயிர்ப்புடனே
பயத்தாலன்றி எம் மனத்தாலொன்றி — நாமும்
பாவத்தினின்று உயிர்த் தெழுவோம்.

— அ. நிக்ஸன்

● ஜலலபாத் வீழ்ச்சியுடன்

# ஆப்கன் கெரில்லாக்களின் அரசுக்கு

# அமெ., பாகிஸ்தான் அங்கீகாரம்

இஸ்லாமாபாத், மார்ச் 25

ஜலலபாத் நகரை கெரில்லாக்கள் கைப்பற்றியவுடன் ஆப்கன் கெரில்லாக்களின் இடைக்கால அரசாங்கத்தை அமெரிக்காவும் பாகிஸ்தானும் ஏககாலத்தில் அங்கீகரிக்க இருப்பதாகத் தெரிய வருகிறது.

ஜலலபாத்தைக் கைப்பற்றி அங்கு இடைக்கால அரசின் தலைமையலுவலகத்தை அமைத்த பின்னர்தான் இடைக்கால அரசுக்கு ஒரு நம்பகத் தன்மை உலகில் ஏற்படும் என்று அமெரிக்காவும் பாகிஸ்தானும் கருதுகின்றன.

அதனால் தான் இடைக்கால அரசை அங்கீகரிக்கும் காலம் இன்னும் வரவில்லை என்று முன்னர் இரு நாடுகளும் அறிவித்தன.

இதனிடையில்—நாளைக்குள் (ஞாயிறு) ஜலலபாத் நகரைக் கைப்பற்றும்படி ஆப்கன் கெரில்லாக்களுக்கு பாகிஸ்தான் இராணுவத் தலைமையகம் உத்தரவிட்டிருப்பதாக மாஸ்கோ வானொலி தெரிவித்தது.

இதே வேளை காபூலில் இருந்து ஏனைய 16 நகரங்களின் போக்குவரத்துத் தொடர்புகள் கெரில்லாக்களினால் துண்டிக்கப்பட்டு விட்டன. காபூலை இணைக்கும்பாதைகளில் உள்ள முக்கிய பாலங்கள் குண்டுகள் வைத்து கெரில்லாக்களினால் தகர்க்கப்பட்டன. (எ)

## சத்திர சிகிச்சை மேசையில் எரிந்து சாம்பரான நோயாளி

பிரெஞ்சு மேற்கு மாகாணத்தில் நான்ரிஸ் பட்டினம் உள்ளது.

அங்குள்ள அரசு மருத்துவமனை ஒன்றில் அவசர சத்திர சிகிச்சைக்காக அறுபது வயது நோயாளி ஒருவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சத்திரசிகிச்சை மேசையில் அவர் மயக்கத்தில் வைக்கப்பட்டிருந்த சமயம் அறையில் வைக்கப்பட்டிருந்த எலக்ரோடில் மின் கசிவு ஏற்பட்டது. அதனால் மின்சார கேபிளில் தீப்பிடித்துக் கொண்டது.

மேசை மீது சத்திரசிகிச்சைக்கு தயாராக மயக்கத்தில் இருந்த நோயாளியையும் தீ தாக்கியது. அவர் எரிந்து சாம்பரானார். (எ)

விமானக் கடத்தல் பற்றி

## ஐ. பி. எம். கம்பியூட்டர் நிறுவனம் 4 லட்சம் ஊழியருக்கு எச்சரிக்கை

வாஷிங்டன், மார்ச். 25

அமெரிக்காவின் மிகப் பெரிய ஐ. பி. எம். [I B M] கம்பியூட்டர் நிறுவனம் தனது 4 லட்சம் ஊழியருக்கு நேற்று எச்சரிக்கை ஒன்றை விடுத்தது.

அமெரிக்க விமான நிறுவனங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் நடத்தும் விமானங்களில் பயணஞ் செய்வதைத் தவிர்க்கும் படி அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாடுகளுக்கு சேவையில் ஈடுபடும் அமெரிக்க விமானங்களை கடத்தப் போவதாக இரகசியப் பயமுறுத்தல் கிடைத்திருப்பதைத் தொடர்ந்தே ஐ. பி. எம். நிறுவனம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

கடத்தல் எப்போது எங்கு இடம்பெறும் என்பது சொல்ல முடியாதிருப்பதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதுமாக இந்த நிறுவனத்திற்கு சுமார் 4 லட்சம் ஊழியர்கள் உள்ளனர். (எ)

## ஈராக் தேர்தல் ஏப்ரல்முதல்திகதி

பக்தாத், மார்ச் 25

வருகிற ஏப்ரல் முதலாம் திகதி ஈராக் நாட்டின் நாடாளுமன்றத்தேர்தல் நடைபெறவுள்ளது.

வாக்களிப்பதற்கு உதவுவதற்காக அன்று தேசியவிடுமுறை தினமாக பக்தாத் அரசு அறிவித்திருக்கிறது.

உண்மையான ஜனநாயகப் பாதையில் இப்பொதுத் தேர்தல் புதிய பாதையைத் தோற்றுவிக்கும் என்று பக்தாத் அரசு அறிவித்தது. (எ)

## சீனாவில் இப்படி ஒரு தானம்!

பீகிங், மார்ச் 25

உடல்வலிமையுள்ள புத்திசாதுரியம் நிறைந்த சீன இளைஞர்கள் சீனாவின் முதலாவது செயற்கைக் கருத்தரிப்பு நிலையத்திற்கு விந்துதானம் செய்து வருகின்றனர் என்று ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கின்றது.

'சைனா டெய்லி' பத்திரிகை செய்தியை வெளியிட்டது.

சீனாவின் வடபகுதிப் பட்டினமான ரியான்ஜின்னில் கடந்த அக்டோபரில் சீனாவின் முதலாவது செயற்கைக் கருத்தரிப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இதுவரை இந்த நிலையம் 500 பெண்களுக்கு செயற்கைக் கருத்தரிப்பு செய்து வைத்திருக்கிறது.

இதற்குக் கட்டணமாக ஒரு பெண்ணிடமிருந்து 27 டொலர் வசூலிக்கப்பட்டது.

விந்துதானம் செய்யும் இளைஞர்கள் 25-35 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஒருவர் ஐந்து முறைதான் தானம் செய்யமுடியும்.

ஒரு தரம் தானம் செய்ய 5.40 டொலர் கட்டணமாக ஒருவருக்கு வழங்கப்படும்.

கடந்த நவம்பரில் சீனாவில் நடந்த தேசியக் கருத்தரங்கின்போது செயற்கைக் கருத்தரிப்பு சீனாவிற்குத் தேவைப்படுவதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

இப்படி சைனா டெய்லி தெரிவித்தது. (எ)

# நாதஸ்வர ஜோடி

## நனி சிறந்து வாழியவே!!

1. மழலைச் சொற்கேட்டு மாந்தி மகிழ்பவர்இக்
குழலைக்கேட் டின்புறுவார் குழைந்து.
2. கம்பன் கவிரஸத்தேன் கூட்டும் சுவைதருமே
அம்புவிக் கிந் நாதஸ் வரம்.
3. செந்தமிழ் இசைநம் பண்பாடு நாதம்
தந்துநா தஸ்வரப் பண்பாடும்.
4. முத்தமிழின் சிகரமன்ன இசைத்தமிழின்
மூதறிஞர் கானமூர்த்தி பஞ்சமூர்த்தி
வித்தகராம் நாதஸ்வர மேதைகட்கு
வெள்ளிவிழா எடுத்திடுவோம் விரைந்து வம்மின்
5. ஈழத் திசையெங்கும் இன்னிசையின் மழைபொழியும்
நாதஸ் வரகோடி நனிசிறந்து வாழியவே!
6. ஈழத்து இசைமரபை இலங்கவைக்கும் கோகிலங்காள்
வாழி எனப்போற்றி வாழ்த்துகிறோம் பல்லாண்டு!
7. அன்பினிக்கப் பண்பினிக்க அமுதத் தமிழினிக்க
இன்புறநா தம்பொழியும் இசைச்சோடி நனிவாழி!
8. ஈழத்துக் கலாரசிகர் இதயம் குளிரவைக்கும்!
ஏழிசையின் செல்வருக்கு இனிதான வெள்ளிவிழா
9. தேவால யங்கள்தோறும் தெய்வத் தமிழிசைப்பண்
பாவாரம் தொடுத்திசைத்த பசுங்கலைஞர் வாழியவே!
10. நாதசுகம் தந்தே நானிலத்தில் மிடியகற்றும்
கீதப்பண் ஜோடிப்புள் கிரவுஞ்சம் வாழியவே.
11. கானமூர்த்தி பஞ்சமூர்த்தி கானச் சகோதரர்காள்!
மோனமிகு நாதஸ்வர கீதமதை ஈழமதில்
ஞானசுகம் பொழிந்திடுநல் தேனமுதச் சிட்டுக்காள்!
ஞாலமதில் சீர்பெருக நனிசிறந்து வாழியவே.
12. ஈழத் திருநாட்டின் ஏழிசையின் வித்தகத்தை
ஆழக் கடல்கடந்து அரங்கேற்றி நிலைநாட்டும்
வேழத் தமிழ்க்கலைஞர் நாதஸ்வர ஜோடி
ஏழிசைப் பஞ்சமூர்த்தி கானமூர்த்தி வாழியவே!

பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்

# கைலாசபதி அரங்கில் இன்று

## நாதஸ்வர சகோதரர்களின் வெள்ளி விழா

யாழ்ப்பாணம், மார்ச் 26

நாதஸ்வர சகோதரர்கள் வீ. கே. கானமூர்த்தி, வீ.கே. பஞ்சமூர்த்தி ஆகியோர் இணையின் வெள்ளி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறுகிறது.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவுக்கு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமை வகிப்பார்.

பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் தம்பதிகளும் மாநகர ஆணையாளர் அன்ரன் அல்பிரெட் தம்பதிகளும் மங்கள விளக்கேற்றி வைக்க திரு. பொன் சுந்தரலிங்கம் கடவுள் வாழ்த்துப் பாடுவார். கலாநிதி இ. பாலசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

வெள்ளிவிழாக் கலைஞர்களைக் கௌரவித்து முரசொலி ஆளுநர் நாயகம் திரு. ம. சிவராசா மலர்முடி சூட்டுவார்.

உதயன் - சஞ்சீவி நிர்வாக இயக்குனர் திரு. ஈ. சரவணபவன் பொன்னாடை போர்த்துவார்.

கோண்டாவில் ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் கோயில் தலைவர் திரு. க. இரத்தினசபாபதி, கோண்டாவில் கந்தர்வளவுப் பிள்ளையார் கோயில் தலைவர் திரு. இராசையா ஆகியோர் வெள்ளி விழாப்பதக்கம் அணிவிப்பார்கள்.

சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், அருட்திரு கலாநிதி நீ. ம. சவரிமுத்து அடிகளார் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

இணுவையூர் என். வீரமணி ஐயர் பாராட்டுப் பத்திரம் வழங்குவார்.

வெள்ளிவிழாக் கலைஞர்களின் நாதஸ்வர ஒலிப்பதிவு நாடாவை கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை வெளியிட்டு வைக்க நவாலியூர் ந. சச்சிதானந்தன் வெளியீட்டுரை நிகழ்த்துவார். திரு. எஸ். தியாகராசா முதற்பிரதியைப் பெறுவார்.

கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர், புலவர் ஈழத்துச் சிவானந்தன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், திரு. இ. ஜெயராஜ், கலாநிதி க. ந. வேலன், வித்துவான்வசந்தா வைத்தியநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கும் இவ்விழாவில் நாதஸ்வர கலாநிதி என்.கே. பத்மநாதன் நன்றியுரை வழங்குவார். (க)

### சிரமதானம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

உடுவில் தென்னிந்திய திருச்சபை சேமக்காலையை கலைச்செல்வி சனசமூக நிலைய அங்கத்தவர்கள் சிரமதானம் மூலம் சுத்தமாக்கினர்.

சிரமதானத்தை வண பிதா இரத்தினசிங்கம் ஆரம்பித்து வைத்தார். (ச)

### அன்பளிப்பு

வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனுக்கு அண்மையில் ரூபா 50 ஆயிரம் அன்பளிப்பு செய்யப்பட்டது. [ச-21]

## இணைந்து நாதமழை.....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலைநுட்பங்களும் — லாவண்யமும் — பிடிமானங்களும் நளினமும் கலாரசிகர்களினாலும் விமர்சகர்களினாலும் சிலாகித்துப் பேசப்படுகின்றன. இச்சிறப்புக்களனைத்தும் பொருந்தியவர்கள் வீ. கே. கானமூர்த்தியும், வீ. கே. பஞ்சமூர்த்தியுமாவார்.

வீ. கே. கானமூர்த்தியவர்கள் தமது மாமனார் திரு. வை. நாரரயணசாமியிடமும், மாவிட்டபுரம் நாதஸ்வர வித்துவான் இராசா அவர்களிடமும் பாடங்கேட்டவராவார். தனித்துவமும்-வித்துவமும் - கம்பீரமும் பொருந்திய கானமூர்த்தி தானே தனியனாகப் பிரிந்து - தனக்கெனவொரு இசைக்குழுவினை அமைத்துக் கொள்ளாது தனது தம்பியும் நாதஸ்வர வாத்தியத்திலே பாண்டித்தியமும் ஞானமும் உடையவருமான வீ. கே. பஞ்சமூர்த்தியுடன் இணைந்தமை இசையுலகம் செய்த நற்றவப்பயனாகும்.

வீ. கே. பஞ்சமூர்த்தி தனது தந்தையார் கோதண்டபாணியிடம் பாடம் [illegible] இணுவில் கே. ஆர். சுந்தரமூர்த்தி வயலின் [illegible] இராதாகிருஷ்ணன் ஆகியோரிடம் சங்கீத நுணுக்க விபரங்களையும் சிற்சில உருப்படிகளையும் கற்றதுடன் 1966 ஆம் ஆண்டு ஆண்டான் கோயில் செல்வரத்தினம் பிள்ளையிடமும், குளிக்கரை கே. எஸ். பிச்சையப்பாபிள்ளையிடமும் விசேட பயிற்சிகளைப் பெற்றார். வீ. கே. பஞ்சமூர்த்தியின் கலைப்பொலிவையும், இசைத்திறனையும் வியந்து பாராட்டிய அண்ணன் கானமூர்த்தி தம்பியின் திறனை வியந்து 'பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ' வென இராமனின் கூற்றுகவரும் செய்யுட் பொருள் போன்று புளகாங்கிதமெய்தினார். இத்தருணத்தில் பஞ்சமூர்த்தியின் உயர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் உறுதுணையாகவிருந்து உற்றுளி உதவியவர் வீ. கே. கானமூர்த்தி ஆவார். இன்று தமையனுடன் அரவணைத்து நிற்கும் கானமூர்த்தியின் மனவிரிவை எண்ணிப்பார்க்கும் தம்பியாகவே பஞ்சமூர்த்தி விளங்குகின்றார். நாதஸ்வரத் தவிலுலகில் இணைப்பு என்பது [illegible]

அபூர்வமானதொரு சங்கதி. இரத்தத் தொடர்பான உறவுடையோர் இணைந்து நாதஸ்வரம் வாசிப்பதோ, பாடுவதோ, நடனமாடுவதோ மிகவும் அருமையாக - அபூர்வமாகவே நிகழ்வதுண்டு.

புகழ்மிக்க பெருங் கலைஞர்கள் தமது [illegible] கலைநயப்பாலும் தெய்வீகப் பண்பினாலுமே இணைந்து கலைத்தொண்டு புரிவர். தந்தையும் மகனுமாக இணைந்து நாதஸ்வரம் வாசிக்கும் சுப்பையா கச்சேரி பஞ்சாபிகேசன் குழுவினரும், கோண்டாவில் வீ. கே. கானமூர்த்தி, வீ.கே. பஞ்சமூர்த்தி சகோதரர்கள் இணைந்து வாசிப்பதும் தெய்வீக சம்பந்தத்தால் ஏற்பட்ட இணைப்பேயெனலாம். இப்பொழுதெல்லாம் வளர்ந்து வரும் இளங்கலைஞர்கள் வரிசையில் இவ்விணைப்பு நிகழ்ந்து வருவது பெரிதும் வாழ்த்தி வரவேற்கத்தக்க அம்சமாகும்.

'நாதஸ்வரஇசைமணிகள்,' 'ஸ்வரநாதஜோதிகள்', 'நாதகான பூபதிகள்', இசைநாத இரட்டையர்கள்', 'நாதஸ்வரகானவாரிதிகள்', 'நாதஸ்வர இளவரசர்கள்' என்னுஞ் சிறப்புப்பட்டங்களைப் பெற்றவர் இவ்விரட்டையர்கள் இலங்கையில் மட்டுமன்றிச் சிங்கப்பூர், மலேசியா, தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகம் ஆகிய இடங்களிலும் நாதகான மழை பொழிந்து இலங்கையின் புகழையும் — தமது புகழையும்— தமிழிசையின் பெருமையினையும் நிறுவியுள்ளனர். கலம்பகமென்னும் பாவியற்று மாற்றலோடு இரட்டையர்கள் எனும் புலவர் பெருமக்கள் வாழ்ந்தமை போன்று நாதகான இசைக்கு இரட்டையர்கள் என்று ஒப்புமை காணத்தக்கவர்கள் வீ. கே. கானமூர்த்தியும், வீ. கே. பஞ்சமூர்த்தியுமாவர். இவ் இரட்டையர்கள் அளவெட்டி தவில்மேதை தெட்சணாமூர்த்தியினதும், இணுவில் என். ஆர். கோவிந்தசாமிப்பிள்ளையினதும் நெருங்கிய உறவினர்களென்பதும் இவர்தம் கலைப்பாரம்பரியத்தின் மகோன்னதச் சிறப்புக்கு மெருகூட்டுவதாகும்.

இசையரசி எம். எஸ். சுப்புலட்சுமியின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ள வீ. கே. கானமூர்த்தி, வீ.கே. பஞ்சமூர்த்தி குழுவினர் சாஸ்திரீய சங்கீதத்திலும், ராக ஆலாபனையிலும், புதிய பரிசோதனை முயற்சிகளிலும் தமது கவனத்தைச் செலுத்தும் அதேவேளை ஜனரஞ்சக வாசிப்பிலும் ஈடுபட்டுத் தம் புகழ் நிறுவிவருகின்றார்கள். இவர்களது 'குழலூதிமனமெல்லாம் கொள்ளைகொள்ளும்' பணி மேன்மேலும் ஓங்கி வளர்ந்து சிறக்க எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரனின் திருவருளை இறைஞ்சி வாழ்த்துவோமாக. இணைப்பு நீடூழி வாழ்க! வாழ்க!!

### தேவகானம்.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊக்குவிப்பும் இச்சகோதரரை இன்று முன்னுக்குக் கொண்டு வந்துள்ளது.

தெய்வ நம்பிக்கையில் ஊறித் திளைத்த கலைஞர்கள் இவர்கள். ஆசாரத்தையும் கட்டுப்பாட்டையும் மேற்கொள்பவர்கள் அடக்கமாகப் பணி செய்பவர்கள். இவர்களின் வெள்ளிவிழாவானது நாதஸ்வரக் கலைக்கே ஒரு தனிப்பெரும் இடத்தை இந்நாட்டு ரசிகப் பெருமக்கள் வழங்குவதை எடுத்துக் காட்டுவதாகும். தேவகானமாக மிளிரும் இவ் இசைக்கு மேலும் பெருமை கொடுத்து வரும் இசைஞானச் சகோதரர்களாகிய இவர்களின் கலைப்பிரவேச வெள்ளிவிழாவில் நாம் அனைவரும் பெருமிதம் அடைகிறோம். இவர்களின் எழில்மிகு வாழ்வுக்காக பிரார்த்திக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
★ பட்டுப் பிடவைகள்
★ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

# உதயன்

26 - 03 - 1989 ஞாயிற்றுக்கிழமை

சேட்டிங் சூட்டிங்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை : யாழ்ப்பாணம்.

# என் மீது மானபங்கம்; கொலை முயற்சி!

# மந்திரி மீது ஜெயலலிதா குற்றச்சாட்டு!!

## செய்தியாளர்கள் முன்னிலையிலேயே மயங்கி விழுந்தார்

சென்னை, மார்ச் 26

நேற்று சட்டசபை நிகழ்ச்சியின் போது தம்மை மானபங்கப்படுத்தவும் கொலை செய்யவும் ஆளும் தி.மு.கவின் அமைச்சர் ஒருவர் முயற்சித்ததாக அ.தி.மு.கவின் தலைவி செல்வி. ஜெயலலிதா குற்றம் சுமத்தினார்.

நேற்று சட்டசபை நிகழ்ச்சிகளின் பின்னர் செய்தியாளருக்குப் பேட்டியளிக்கையிலேயே அவர் இக்குற்றச் சாட்டை வெளியிட்டார்.

செய்தியாளர் மாநாட்டின் போது, சட்டசபையில் கிழிக்கப்பட்ட தமது புடவையையும், தமக்கு ஏற்பட்ட காயங்களையும் அவர் செய்தியாளருக்குக் காட்டினார்.

சட்டசபையில் தமக்கு ஏற்பட்டதாகக் கூறப்படும் அவலங்களைச் செய்தியாளர் மாநாட்டில் எடுத்துரைத்த செல்வி ஜெயலலிதா அங்கு செய்தியாளர்கள் முன்னிலையிலேயே மூர்ச்சித்து விழுந்தார்.

தம்மைக் கொலைசெய்யவும், மானபங்கப்படுத்தவும் தி.மு.க. அமைச்சர் ஒருவர் முயன்றதாகவும்—

ஆனால் தமது கட்சி எம்.எல். ஏக்கள் தம்மைச் சூழ நின்று தம்மைக் காப்பாற்றியதாகவும் ஜெயலலிதா மேலும் சொன்னார்.

தாக்குதல்களினால் தமது உடல் முழுவதும் வலி ஏற்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

இதேவேளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் செல்வி ஜெயலலிதாவை தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார் நேற்றுச் சென்று பார்வையிட்டார். (உ-எ)

# ஆளுநரிடம் ஜெயலலிதா முறையீடு

தமிழக சட்டசபையில் நேற்று இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்து தமிழக எதிர்க் கட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா ஆளுநர் அலெக்ஸாண்டரிடம் நேரடியாகச் சென்று முறையிட்டார்.

இந்த விடயங்கள் குறித்து எழுத்து மூலம் மனுத் தந்தால் அதனை மத்திய அரசுக்குத் தாம் அனுப்பி வைப்பதாக ஆளுநர் செல்வி ஜெயலலிதாவிடம் கூறினார். (உ)

# அமைதிப்படை அனுமதி; ஸ்ரீலங்காபொலீஸ்பறிமுதல்!

## விறகு லொறியும் சாரதியும் நீதிமன்றில்!!

மட்டக்களப்பு, மார்ச் 26

இந்திய அமைதிப்படையிடம் "அனுமதி" பெற்று எடுத்துவரப்பட்ட 45 ஆயிரம் ரூபா பெறுமதியான விறகு ஸ்ரீலங்கா பொலீசாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

விறகை ஏற்றிவந்த லொறிச் சாரதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். லொறியும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது.

சட்டவிரோதமான முறையில் விறகு எடுத்துவரப்பட்டதாக ஏறாவூர் பொலீசார் நீதிபதி ஜனாப். எம். காரியப்பரிடம் தெரிவித்தனர்.

லொறியை 50 ஆயிரம் ரூபா பிணையிலும், சாரதியை ஆயிரம் ரூபா பிணையிலும் செல்லுமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

அமைதிப்படையினர் வழங்கும் "பேர்மிட்" ஒன்றைப் பெற்றே விறகு ஏற்றி வரப்பட்டதாகச் சொல்லப்பட்டது. (அ-21)

# கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத் தலைவராக பெண்மணி

லண்டன், மார்ச் 25

கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத் தலைவராக (Association of Cricket Umpires) ஒரு பெண் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தச் சங்கம் உலகில் உள்ள கிரிக்கெட் மத்தியஸ்தர்களையும், ஸ்கோரர்களையும் பிரதிநிதித்துவம் செய்கிறது.

முதலாவது பெண் தலைவர் என்ற பெருமையைப் பெற்றவர் ஷீலா ஹில், வயது 60. ஓய்வு பெற்ற ஆசிரியை.

இவ்வளவு நாளும் பெண்கள் விளையாட்டுக்களுக்குத் தான் இவர் மத்தியஸ்தராக இருந்தார்.

லண்டன் போர்ட்ஸ் மைதானத்திற்குள் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் போது பெண்கள் அனுமதிக்கப்படுவது இல்லை. இப்போது அது மீளாய்வு செய்யப்படுகிறது. (உ-எ)

## ஓய்வூதியத்திற்கான கழிவு வீதம் அதிகரிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 26

அரச ஊழியர்களின் விதவைகள், அனாதைகள் கைம்பெண் ஓய்வூதிய கொடுப்பனவுக்கான கழிவு வீதம் கடந்த ஜனவரி முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக அமைச்சுச் செயலாளர் திரு. சிறில் கமகே இது தொடர்பாக வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் அவ் அதிகரிப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய கழிவு விவரம் வருமாறு:-

★ ரூ. 16 ஆயிரத்து 800 வரை — 3 வீதம் (முன்பு ஒன்றரை வீதம்)

★ ரூ. 16 ஆயிரத்து 800 முதல் 25 ஆயிரத்து 800 வரை — 5 வீதம் (முன்பு 3 வீதம்)

★ ரூ.25ஆயிரத்து 800இற்கு மேல் — 6 வீதம் (முன்பு 4 வீதம்) [உ-21]

## யாழ் - மட்டுநகர் பஸ் சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ் - மட்டக்களப்பு பஸ் சேவை கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக — கடந்த 2 ஆம் திகதி முதல் — தடைப்பட்டிருக்கிறது.

பொலனறுவைப் பகுதிகளில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்தே இச் சேவை இடைநிறுத்தப்பட்டது.

மட்டக்களப்பு டிப்போ பஸ், யாழ்ப்பாணத்திற்கான தனது சேவையை ஆரம்பித்த பின்னரே யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு பஸ் சேவை நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## விவசாயக் கருத்தரங்கு

கோப்பாய், மார்ச் 26

கோப்பாய் வடக்கு பாலர் நிலைய மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு விவசாயிகள் கருத்தரங்கு ஒன்று நடைபெறவிருக்கிறது. திரு. க. இ. குமாரசாமி நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார்.

யாழ் மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் ஆகியோரும் கருத்தரங்கில் கலந்து கொள்வர். (உ-72)

## கலைஞர்களுக்கு வாழ்த்தும் பாராட்டும்

கானமூர்த்தி—பஞ்சமூர்த்தி சகோதரர் இணையின் வெள்ளி விழாவை முன்னிட்டு, வடக்கு கிழக்கு மாகாண அரசின் சார்பில் வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை உறுப்பினர் திரு. க. இரவீந்திரன் நாதஸ்வரக் கலைஞர்கள் இருவரையும் பாராட்டி வாழ்த்துச் செய்தி ஒன்று வெளியிட்டிருக்கின்றார்.

காரைநகர் கம்பன் கழகமும் நாதஸ்வரக் கலைஞர்களைப் பாராட்டிச் செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறது. (அ)

## நடிகர் ஆனந்தன் காலமானார்

சென்னை, மார்ச் 26

தமிழ்த் திரைப்பட நடிகர் சி. எல். ஆனந்தன் நேற்றுக் காலை காலமானார்.

அவருக்கு வயது 55. சில காலமாக அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார்.

விஜயபுரி வீரன் படம் மூலம் அறிமுகமான ஆனந்தன் வீரத்திருமகன் உட்பட பல படங்களில் நடித்தவர் பிரபல கவர்ச்சி நடிகை டிஸ்கோ சாந்தியின் தந்தை இவர். (உ-எ)

## கடும் குளிராக மாறும் 1989

இந்தூர் மார்ச் 25

இந்த நூற்றாண்டிலேயே 1989 இல் மழைகாலம் கடும் குளிராக இருக்கப் போகிறது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தூரில் உள்ள ஹோல்கர் விஞ்ஞான கல்லூரியின் பேராசிரியர் டாக்டர் ஆர். எஸ். ஸ்ரீவத்சவா இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

தென்பசுபிக் கடல் நீர் குளிர்ந்து விட்டதால் இந்த மாற்றம் ஏற்படும் என்று அவர் கூறியிருக்கின்றார். [எ]

## கள்ளச்சாராயம் வாரணாசியில்

லக்னோ, மார்ச் 26

உத்தரப் பிரதேசத்தில் வாரணாசியில் கள்ளச்சாராயம் குடித்ததில் 6 பேர் இறந்தனர், வேறு 6 பேர் ஆபத்தான நிலையில் அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். (உ-எ)

# தி.மு.கவின் எம்.எல்.ஏக்களை கண்டிக்கிறார் மூப்பனார்

சென்னை, மார்ச் 26

நேற்று தமிழக சட்டசபையில் இடம்பெற்ற சம்பவங்கள் அங்கு ஜனநாயகத்துக்கு இடமில்லை என்பதை வெளிப்படுத்துகின்றன.

—இப்படி தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார் தெரிவித்திருக்கிறார்.

சட்டசபையில் ஆளும் தி.மு.க. உறுப்பினர்கள் நடந்து கொண்டவிதம் காட்டுமிராண்டித்தனமானது என்றும் அவர் கண்டனம் தெரிவித்தார்.

வரதராஜப் பெருமாள் விவகாரம்:

# இலங்கை அரசுக்கு தெரியும் என்கிறார் இந்திய அதிகாரி

புதுடில்லி, மார்ச் 26

வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் இலங்கை அரசுக்கு நன்றாகத் தெரிந்தே புதுடில்லி வந்து பேச்சுக்கள் நடத்தினார்.

புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவில் மத்திய அமைச்சர்கள், பிரதமர் ஆகியவர்களுடன் திரு. வரதராஜப்பெருமாள் பேச்சுக்கள் நடத்தியது குறித்து அவரிடம் விளக்கம் கோரப்படும் என்று இலங்கையில் வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்ததாகக் கூறப்படும் செய்திகள் பற்றி புதுடில்லி வெளியுறவு அமைச்சு அதிகாரியிடம் செய்தியாளர் கேட்டனர்.

அதற்கு மேற்கண்ட ஆறு பதிலளிக்கப்பட்டது. (இ)எ)

## தமிழக சட்டப்பேரவை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) தமிழ்க்குடிமகன் சொன்னார்.

'அவையின் உரிமை மீறப்படவில்லை' என்றும் சட்டத்தின்முன் அனைவரும் சமம். இதற்கு செல்வி ஜெயலலிதா விதிவிலக்கு அல்ல' என்றும் முன்னாள் சபாநாயகர் பி.எச். பாண்டியன் விவாதித்தார்.

உடனே அ. தி. மு. க. எம். எல். ஏக்களும் திரு. பாண்டியனும் மாறி மாறிப் போர்க்குரல் எழுப்பினர்.

தொடர்ந்து அ. தி. மு. க. உறுப்பினர்களும் தி. மு. க. உறுப்பினர்களும் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டனர். பட்ஜட் அறிக்கைகள் பறந்தன.

கோப்புக்கள், பட்ஜட் அறிக்கைகள் ஏவுகணைகளாகின.

மேசைமீது பொருத்தப்பட்டிருந்த மைக்குகள் பறந்தன.

உள்ளாட்சி அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தலையில் இரத்தம் சொட்டச் சொட்டக் காணப்பட்டார்.

பட்ஜட் அறிக்கையை முதலமைச்சரின் கையில் இருந்து அ.தி.மு.க. எம்.எல்.ஏ. ஒருவர் பறிக்க முயன்றார். அப்போது கலைஞர் கருணாநிதியின் கண்ணாடி விழுந்தது. கலைஞர் பிரமித்து நின்றார்.

ஜெயலலிதா மீது நான்கைந்து எம்.எல்.ஏக்கள் தாக்குதல் நடத்த முயற்சித்தனர். அப்போது அவரது கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏக்கள் கேடயமாக நின்று அவரைக் காப்பாற்றினர்.

சட்ட சபைப் [illegible]களால் நிலைமைக் [illegible] ளக்கமுடியவில்லை.

பத்து நிமிடங்கள் கழித்து அமளி அடங்கியது.

அமைதி தொடங்கிய சிறிது நேரத்தில் பேரவையை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

ஜெயலலிதா, கருணாநிதி ஆகியோர் உறுப்பினர்களின் பாதுகாப்போடு வெளியே சென்றனர்.

செல்வி ஜெயலலிதா தலைவிரிகோலமாக அவையிலிருந்து வெளியே வந்தார்.

சபையில் நடந்த அராஜகத்தைக் கண்டித்து காங்கிரஸ் உறுப்பினர்கள் திரு. கருப்பையாமூப்பனார் தலைமையில் வெளிநடப்புச் செய்தனர்.

சபை மீண்டும் கூடியதும் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பில்லையென்று கூறி காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் இரண்டாவது தடவையாக வெளி நடப்புச் செய்தனர்.

சபாநாயகர், அனைத்துப் பேச்சுக்களும் சபைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுவதாகக் கூறி வரவு செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்யுமாறு முதலமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.

பின்னர் முதலமைச்சர் வரவு செலவுத் திட்டத்தைப் படித்தார்.

அதன் பின்னர் அ.தி.மு.க எம்.எல்ஏக்கள் 28 பேரையும் இம்மாதம் 31 ஆம் திகதிவரை சஸ்பெண்ட் செய்யும் தீர்மானம் குரல் வாக்கெடுப்பின் [illegible] (உ-எ)

# திட்டமிட்டு கலகம் அ.தி.மு. கவினர் நடத்தினர்

## கலைஞர் கருணாநிதி பேட்டி

சென்னை, மார்ச் 26

அ. தி. மு. க. சட்ட சபை உறுப்பினர்கள் நேற்று சபையில் திட்டமிட்டு கலகம் நடத்தியதாக தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி குற்றம் சுமத்தியிருக்கிறார்.

நேற்று சட்டசபையில் வைத்து அ. தி. மு. க. உறுப்பினர் ஒருவர் தன்மீது பாய்ந்து தன்னிடமிருந்த 'பட்ஜெட்' சம்பந்தமான கோப்புகளைப் பறித்து தன்னைத் தாக்கியதாகவும்-

இதனால் தன்னுடைய மூக்குக் கண்ணாடி உடைந்ததாகவும் அவர் மேலும் சொன்னார்.

தாக்குதல் நடத்திய எம். எல். ஏயை செல்வி ஜெயலலிதா ஊக்கப்படுத்தியதாகவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

ஆனால் தி. மு. க. எம். எல். ஏக்கள் தம்மைச் சுற்றி நின்று அந்த உறுப்பினரிடமிருந்து பாதுகாத்துத் தம்மை அழைத்துச் சென்றதாக கலைஞர் கருணாநிதி மேலும் சொன்னார்.

ஆனால் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாக கலைஞர் கூறி உள்ள அ. தி. மு. க. எம். எல். ஏ. அந்தக் குற்றச் சாட்டை மறுத்திருக்கிறார். [உ]

## மேற்கிந்தியா ஒரு விக்கெட் இழந்து 207 ஓட்டங்கள்

கயானா, மார்ச் 26

இந்தியாவுக்கு எதிராக கயானாவில் நடைபெறும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடுகிறது.

நேற்று இச் செய்தி அச்சுக்குப் போகும்போது மேற்கிந்திய அணி ஒரு விக்கெட்டை இழந்து 207 ஓட்டங்களை எடுத்திருந்தது.

## அமெரிக்க அரசு அங்கீகாரம்

சான்சல்வடோர், மார்ச் 21

எல்சல்வடோரின் புதிய ஜனாதிபதியாக தீவிர வலதுசாரி அறேனா கட்சி வேட்பாளர் திரு. அல்பிரேடா டிறிஸ்டியானா தெரிவு செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

60 சதமான வாக்காளர் கடந்த ஞாயிறு நடந்த தேர்தலில் வாக்களித்தனர்.

புதிய ஜனாதிபதியின் அரசை அங்கீகரிக்கப்போவதாக அமெரிக்கா அங்கீகரித்துள்ளது. (எ)

## ரயில் பயணி....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] தெரிவித்தன.

சம்பந்தப்பட்ட ரயில்பயணி எந்த இடத்தில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார் என்பது கண்டறியப்படவில்லை,

காயமடைந்தபயணி இரத்தக்காயத்துடன் ரயிலைவிட்டு இறங்கியபொழுதே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானது தெரிவிக்கப்பட்டது. [அ-10]

## இன்று உயிர்த்த ஞாயிறு

யாழ்ப்பாணம், மார்ச் 26

இன்று கிறிஸ்து உயிர்த்தெழுந்த ஞாயிறு தினமாகும். அதனையொட்டி கிறிஸ்தவ தேவாலயங்களில் இன்று மத ஆராதனைகளும், திருப்பலி பூஜைகளும் இடம்பெறும். [உ-9]

# கொன்ரா கிளர்ச்சியாளருக்கு மீண்டும் அமெரிக்க உதவிகள்

நிக்கரகுவாவின் இடதுசாரி அரசை எதிர்த்து ஆயுதப் போராட்டம் நடத்தும் கொன்ரா கிளர்ச்சிக்காரர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் திட்டத்தை அமெரிக்க நாடாளுமன்றம் நேற்று அங்கீகரித்தது.

மருந்து வகைகள், உணவு மற்றும் மனிதாபிமான உதவிகளை அமெரிக்கா இத்திட்டத்தின்கீழ் கொன்ரா கிளர்ச்சியாளருக்கு வழங்கும்.

இராணுவ உதவிகள் வழங்கப்படமாட்டாது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## பொற்கோயில் அருகே குண்டு

சண்டிகார், மார்ச் 26

அமிர்தஸரஸில் பொற்கோயில் அருகில் நேற்றுக் காலை குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார். 16 பேர் படுகாயமடைந்தனர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லம்மா சண்முகம் (சிவரெத்தினம்)

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சண்முகம் காலமாகிவிட்டார். இவர் ராசாத்தியின் அன்புத் தாயாரும், மருதுப்பிள்ளை கணபதிப்பிள்ளை (எம்.ஜி.எம்.பிரின்டிங்ஸ் கொழும்பு, எம்.ஜி.எம். வீடியோ சென்ரர், நவீனசந்தை, யாழ்ப்பாணம்.) அருமை மாமியாரும், சுதாகரன் (சுவிஸ்) மனோகரன் (சுவிஸ்),யாழினி,அமிழ்தினி,மாலினி,சந்திரசேகரம் [சூட்டி] ஆகியோரின் அருமைப்பேத்தியாரும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் 37/12 பிறவுன் வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று ஞாயிறு(26.03 89) காலை 10.00 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

த்கவல்:-
ம.கணபதிப்பிள்ளை.

37/12 பிறவுண்வீதி,
1 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (10185)

### திரு. கனகரட்ணம் சிதம்பரநாதன்

சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைச் சேர்ந்த கனகரட்ணம் சிதம்பரநாதன் [நிலஅளவைக் கங்காணி, மன்னார்] காலமானார்.

இவர் தருமபூபதியின் அன்புக் கணவரும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி சிவசக்தி, யாழ். பரியோவான் கல்லூரி மாணவன் கதிர்மகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்றவர்களான கனகரட்ணம் தம்பதியரின் அருமைப் புதல்வனும், மேரி செல்வத்தின் பெருமகனும், காலம் சென்ற கதிர்காமு, திருமதி சிவகாமி ஆகியோரின் அன்பு மருமகனும், காலம் சென்ற முருகேசு செல்வத்தின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 26 - 03 - 89 ஞாயிறு காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
நடேசன்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி. [10192]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 26 - 03 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது